# இஸ்லாம்

# தரம் 4

## கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாட நூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு
**www.edupub.gov.lk** வலைத்தளத்தை நாடுங்கள

முதலாம் பதிப்பு 2018

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
இல.341/1/109, பெலன்வத்த, பன்னிப்பிட்டியவில்
அமைந்துள்ள பிரின்ட் வன் தனியார் நிறுவனத்தில்
அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.



bberjocky@flickr

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

තිළිණය ලෙසින් රජයෙන් මේ පොත ලදිමි
කියවා එයින් නැණ ගුණ එළි කර ගනිමි
මගෙ රට වෙනුවෙන් ම දෑ සම්පත් රකිමි
මේ පොත එන වසරෙ වෙන කෙනකුට පුදමි

அரசின் வெகுமதியாய் நூலிதனைப் பெற்றேன்
அறிவு பெருகிடவே நூலிதனைக் கற்பேன்
தாய் நாட்டின் வளமெனவும் நூலிதனைக் காப்பேன்
பல மாணவரும் பயின்றிடவே நூலிதையே அளிப்பேன்

From the government, I received this as a gift
I'll read it, light up my knowledge and practise thrift
On my country's own behalf , I'll protect the national resources
And offer this book to another one as a fresh garland of roses



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி


கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீ ங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



**அகில விராஜ் காரியவசம்**
**கல்வி அமைச்சர்**

## முன்னுரை

உலகம் நாளுக்குநாள் புதிதாகி மாற்றமுறுகின்றது. அதனைச் சரியாக உணர்ந்து நல்லவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் மாறும் உலகின் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கும் உங்களுக்கு வழிகாட்டுவது கல்வியாகும். ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடன் செயற்பட்டு சூழலுக்கும் வேலையுலகிற்கும் இணக்கமாகவும் ஓய்வு நேரத்தை சுவாரஷ்யமாகவும் கழித்து சிறந்த ஆளுமை கொண்ட பிரசையாவதற்கு அவசியமான திறன்களை உங்களுக்குப் பெற்றுத் தருவதே எமது நோக்கமாகும்.

அத்தோடு இலங்கைச் சூழலில் மாத்திரமன்றி சர்வதேச மக்களுடனும் சிறந்த தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளக்கூடிய சமநிலை ஆளுமை கொண்ட ஒருவராக உங்களை ஆக்குவதற்குத் தேவையான கற்றல் சாதனங்களை உற்பத்திசெய்வதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

2016 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டுக்காக உங்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்ற இப்புதிய பாடநூலானது மேற்குறித்த உயர் எதிர்பார்ப்புகளை நோக்கங்களாகக் கொண்டேயாகும். அவற்றை நன்றாகக் கற்று அதில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மூலம் உங்கள் ஆற்றல்கள், திறன்களை வளர்த்துக்கொண்டு கௌரவத்துடன் எதிர்கால உலகில் பிரவேசிப்பதற்கு உங்களை வாழ்த்துகின்றேன்.

இந்நூலை உங்கள் கைகளில் தவழச் செய்வதில் ஒத்துழைப்பு நல்கிய எழுத்தாளர்கள் மற்றும் பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டபிள்யூ. டீ. பத்மினி நாளிகா**
*கல்வி வெளீயீட்டு ஆணையாளர் நாயகம்*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்*
*“இசுருபாய''*
*பத்தரமுல்ல.*
2018. 05. 07

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

திருமதி. டபிள்யூ.டீ. பத்மினி நாளிகா

**கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,**
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## வழிகாட்டல்

திருமதி. டபிள்யூ.ஏ. நிர்மலா பியசீலி

**கல்வி வெளியீட்டு ஆணையாளர்,**
(அபிவிருத்தி)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## இணைப்பாக்கம்

அஷ்ஷெய்க் எம்.ரீ. அப்துர் ரஹ்மான்

**உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,**
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## எழுத்தாளர் குழு

அஷ்ஷெய்க் எம்.எச்.எம். புஹாரி

**ஆசிரிய ஆலோசகர்,**
வலயக் கல்விப் பணிமனை,
மினுவங்கொடை..

அஷ்ஷெய்க் எம்.எம். பஸ்லுர் ரஹ்மான்

**சிரேஷ்ட ஆசிரியர்,**
அலிகார் மகா வித்தியாலயம்,
கல்எலிய.

ஜனாப் எம்.எச்.எம். நாளிர்

**வளவாளர் (ஓய்வுநிலை),**
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.

மௌலவியா எம்.என்.எப். நிஸாயா

**ஆசிரியர்,**
பாபுஸ் ஸலாம் மகா வித்தியாலயம்,
நாம்புலுவ, பஸ்யால.

ஜனாப் எம்.எப்.எம். நள்ரி

**அதிபர்,**
அல் ஹம்ரா மகா வித்தியாலயம்,
தர்காநகர்.

மௌலவியா எம்.ஐ.எஸ். ஸுஹாரா

**ஆசிரியை,**
ஹைரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி,
கொழும்பு 09.

**பதிப்பாசிரியர் குழு**

| | |
|---|---|
| அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் | **பிரதிப் பணிப்பாளர்,**<br>நளீமியா இஸ்லாமியக் கலாபீடம், பேருவளை.<br>**பிரதித் தலைவர்,**<br>அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா. |
| ஜனாப் இஸட். தாஜுதீன் (இ.க.நி.சே) | **பணிப்பாளர்,**<br>முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவு,<br>கல்வி அமைச்சு. |
| அஷ்ஷெய்க் எம்.எஸ். அப்துல் பாரி | **முதுநிலை விரிவுரையாளர்,**<br>அரபு, இஸ்லாமிய நாகரிகப் பிரிவு,<br>பேராதனை பல்கலைக்கழகம். |
| அஷ்ஷெய்க் ஜே.எம். ஐஸார் | **விரிவுரையாளர்,**<br>சமயப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம. |
| அஷ்ஷெய்க் எம்.ரீ. அப்துர் ரஹ்மான் | **உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,**<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

**மொழிப் பதிப்பு**

| | |
|---|---|
| ரிம்ஸா முஹம்மத் | **பிரதம ஆசிரியர்,**<br>பூங்காவனம் சஞ்சிகை, கல்கிசை. |

**சரவைப் பார்த்தல்**

| | |
|---|---|
| அஷ்ஷெய்க் ஏ. அப்துஸ் ஸமது | **பிரதிப் பணிப்பாளர்,**<br>வடமத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்,<br>அனுராதபுரம். |

**இறுதி மதிப்பீடு**

| | |
|---|---|
| மௌலவி எம்.ரீ. இக்பால் | **ஆசிரிய ஆலோசகர்,**<br>வலயக் கல்விப் பணிமனை, கொழும்பு - 02 |
| மௌலவி கே.பீ. நஸார்தீன் | **அதிபர்,**<br>அல் மதீனா வித்தியாலயம், குடாநெலுபாவை,<br>ஹிதோகம, அனுராதபுரம். |
| மௌலவி ஏ.டபிள்யூ. அன்வர்தீன் | **அதிபர்,**<br>ஓச்சட்வத்த மு.வி., நிட்டம்புவ. |

**தளக்கோளம், கணினி வடிவமைப்பு**

| | |
|---|---|
| எச்.எப். ரிஸ்னா | **கணினி வடிவமைப்பாளர்,**<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

**அட்டை வடிவமைப்பு**

| | |
|---|---|
| ஜனாப். எம்.டபிள்யூ.ஏ. அஸார் | **கணினி வடிவமைப்பாளர்,**<br>6 F, ரக்ஸபான, மல்வான. |

**சித்திரம்**

| | |
|---|---|
| செல்வி எம். மகேஷிகா | கந்தவத்த, மல்வான. |

# உள்ளடக்கம்


1. அல்லாஹ் 1
2. அல்லாஹு ஹாதீனா 4
3. கலிமதுத் தவ்ஹீத் 7
4. வேதங்களும் ஸுஹுபுகளும் 9
5. ரஸூல்மார்கள் 12
6. இறுதித் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் 14
7. இறுதி வேதம் அல்குர்ஆன் 17
8. அல்குர்ஆனின் சிறப்புகள் 19
9. வுழூ 21
10. தொழுகையின் முக்கியத்துவம் 25
11. தொழுகையை நிறைவேற்றுவோம் 30
12. ஸூரத்துல் பலக் 39
13. ஸூரத்துன் நாஸ் 41
14. சுத்தம் பேணுவோம் 43
15. எமது வீடு 46
16. சுற்றாடலைப் பேணுவோம் 48
17. நஜீஸை நீக்குவோம் 51
18. தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படுவோம் 53
19. விருந்தினரை உபசரிப்போம் 57
20. நோயாளிகள் 60
21. அண்டை அயலார் 62
22. பிறருக்கு உதவுவோம் 64
23. பயணிகள் 67
24. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நற்பண்புகள் - I 70
25. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நற்பண்புகள் - II 72
26. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வெட்க உணர்வு 77
27. இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி 81

## பாடநூல் கருப்பொருட் பாடல்

மனதில் பூ பூத்திடும் புதிய புத்தகம்
வாசமே
கண்களில் காட்சி தோன்றும் எமது
உலகமே வெளிச்சமே.../ /

புத்தகம் அறிவு வரும் முகங்களில்
மகிழ்வு தரும்
புதிய புத்தகம் புதிய பொலிவு பெறும்
தினமுமே.

புத்தகம் கண்கள் தானே அதை
காப்பது போலவே
அறிவைத் தரும் புத்தகங்களை
மகிழ்வுடன் காப்போமே.

மனதில் பூ பூத்திடும் புதிய புத்தகம்.../ /

பாடலாசிரியர் :- சரத் குமார பெரேரா
இசை :- மகேஷ் தெனிப்பிட்டிய

# 1 அல்லாஹ்

வானத்தைப் பாருங்கள். அங்கே சூரியனைப் பார்க்கின்றீர்கள். சந்திரனைப் பார்க்கின்றீர்கள். இவற்றைப் படைத்தவன் யார்?

இரவில் தூங்கி ஓய்வெடுக்கிறோம்.
பகலில் நாம் படிக்கிறோம், விளையாடுகிறோம்.
இரவையும் பகலையும் ஏற்படுத்துபவன் யார்?

காற்றையும் மழையையும் தருபவன் யார்?
மரம், செடி, கொடிகளை முளைக்கச் செய்பவன் யார்?
எம்மைப் படைத்துப் பாதுகாப்பவன் யார்?

எமக்கு அழகான தோற்றத்தைத் தந்தவன் யார்?
எமது தேவைகளை நிறைவு செய்து தருபவன் யார்?

இவ்வாறான அனைத்து வினாக்களுக்குமான ஒரே விடை **அல்லாஹ்** என்பதாகும்.



அல்லாஹ்வே உலகிலுள்ள அனைத்தையும் படைத்துப் பரிபாலிப்பவனாவான். அவனையே (رَبُّ الْعٰلَمِيْنَ) 'ரப்புல் ஆலமீன்' என்கிறோம்.

அல்லாஹ் அருளாளன், அன்புடையவன், அவனைப் போல் வேறெவரும் அருள் புரிவதுமில்லை. அன்பு காட்டுவதுமில்லை.

அல்லாஹ் யாவற்றையும் நன்கு அறிந்தவன். அவன் அறியாமல் எதுவும் நிகழாது. மரத்திலிருந்து விழும் இலையையும் அதன் எண்ணிக்கையையும் கூட அவன் அறிவான்.

நாம் செய்பவற்றையும் நினைப்பவற்றையும் அவன் அறிந்துகொள்கிறான்.

அல்லாஹ் ஆற்றலும் சக்தியும் மிக்கவன். வானங்கள், பூமி அதில் உள்ள அனைத்தையும் அவனே படைத்தான். அவன் ஒன்றைப் படைக்க நாடினால் 'ஆகுக' என்று கூறுவான். அது அப்படியே ஆகிவிடும்.

அல்லாஹ் எந்த ஒன்றுக்கும் ஒப்பாகாதவன். அவனுக்கு தாய் தந்தையர் கிடையாது. மனைவி மக்களும் கிடையாது. அவனுக்குத் தேவைகள் எதுவும் இல்லை. ஆனால் அனைத்துப் படைப்பினங்களுக்கும் அவன் தேவையானவன். எமது தேவைகளைக் கேட்டுப் பெற்றுக்கொள்வதற்கு அவனே மிகவும் தகுதியானவன்.

அல்லாஹ் எம்மை அழகிய தோற்றத்தில் படைத்தான். எமக்குத் தேவையான காற்று, உணவு, நீர் முதலான அனைத்தையும் தருகிறான். எனவே, நாம் அவனுக்கே நன்றி செலுத்த வேண்டும்.

சூரியனும் சந்திரனும், வானமும் பூமியும், மரம் செடி கொடிகளும், மிருகங்களும் பறவைகளும் இவை போன்ற அனைத்தும்

அல்லாஹ்வையே துதிக்கின்றன. (ஸுப்ஹானல்லாஹ் -سُبْحَانَ اللهِ).

அவனைப் புகழ்கின்றன. (அல்ஹம்துலில்லாஹ் -اَلْحَمْدُ لِلّٰهِ).

அவனது நியதிப்படியே இயங்குகின்றன.

அப்படியாயின் மனிதர்களாகிய நாமும்

- அல்லாஹ்வைத் துதிப்போம்.
- அவனைப் புகழ்வோம்.
- அவனுக்கு அடிபணிந்து நடப்போம்.
- அவனை மாத்திரமே வணங்குவோம்.

## பயிற்சி

### சுருக்கமான விடை தருக.

1. எம்மைப் படைத்துப் பாதுகாப்பவன் யார்?

2. அல்லாஹ்வின் பண்புகள் இரண்டைத் தருக.

3. எவையெல்லாம் அல்லாஹ்வைத் துதிக்கின்றன?

# 2 அல்லாஹு ஹாதீனா

## (அல்லாஹ்வே எமக்கு நேர்வழி காட்டுபவன்)

அல்லாஹ் எம்மைப் படைத்தாயே
அருளும் அன்பும் சொரிந்தாயே
பாதையறிந்து நாம் செல்ல
பார்வை எமக்குத் தந்தாயே

இருளில் நாங்கள் மூழ்கிவிட்டால்
கண்கள் இருந்தும் பயனேது
பகலில் நாங்கள் வழியறிய
பகலவன் அவனை வைத்தாயே

கதிரவன் மறைந்தால் நமக்கென்ன
காரிருள் வந்தால் நமக்கென்ன
இரவில் எமக்கு வழிகாட்ட
நிலவை வைத்தாய் விளக்காக






கடலில் கப்பல் வழியறிய
வானில் விமானம் பறந்து செல்ல
இடங்கள் அறிந்து செயலாற்ற
திசையை வைத்தாய் எண்புறமும்

இருளில் வாழ்ந்தேன் கருவுலகில்
சிசுவாய் பிறந்தேன் நான் அறியேன்
கண்கள் திறந்தே பார்த்தேன் நான்
தாயுடன் நின்றேன் பூவுலகில்

மனிதன் என்ற பெயர்க்கேற்ப
மாண்புடன் வாழ்ந்து ஜெயம் பெறவே
சதியை வெல்ல ஷைத்தானின்
மதியைத் தந்தாய் பிரித்தறிய

மாநபி வந்தார் மறையோடு
நேர்வழியில் நாம் சென்றிடவே
அதுதான் ஸிராதுல் முஸ்தகீமாம்
சுவனம் செல்லும் பாதையதாம்

செய்யும் செயல்கள் அனைத்தையும்
தெளிவாய்ப் பார்ப்பவன் நீயன்றோ - நாம்
கேட்கும் துஆக்கள் பரிந்துரைகள்
ஏற்று அருள் புரிவாய் அல்லாஹ்

அல்லாஹ் எமக்கு ஹாதீனா
அல்லாஹ்வே எமக்கு நேர்வழி காட்டுபவன்

## பயிற்சி

### சரி, பிழை கூறுக.

1. கப்பல் செல்லவும், விமானம் பறக்கவும் எட்டுப்புறமும் அல்லாஹ் திசைகளை வைத்தான். ( )

2. அவன் மனிதனுக்குடீத் தவறான வழியைக் காட்டுகின்றான். ( )

3. நிலவின் மூலம் இரவில் எமக்கு அல்லாஹ் வழிகாட்டுகின்றான். ( )

4. அவன் தூய்மையானவன். ( )

5. ஷைத்தானின் சதியை வெல்ல அல்லாஹ் எமக்கு மதியைத் தந்தான். ( )

6. ஸிராத்துல் முஸ்தகீம் என்பது தவறான பாதையாகும். ( )

# 3 கலிமதுத் தவ்ஹீத்

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ

لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ يُحْيِيْ وَيُمِيْتُ

بِيَدِهِ الْخَيْرُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

லாஇலாஹ இல்லல்லாஹு, வஹ்தஹு, லாஷரீக்க லஹு, லஹுல்முல்கு, வலஹுல் ஹம்து, யுஹ்யீ, வயுமீத்து, பியதிஹில் ஹைரு, வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர்

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன்; அவனுக்கு யாதொரு இணையுமில்லை. ஆட்சியெல்லாம் அவனுக்கே உரியன, புகழ் அனைத்தும் அவனுக்கே உரியன; அவனே (எல்லாவற்றுக்கும்) உயிர் கொடுக்கின்றவன்; அவனே (எல்லாவற்றையும்) மரணிக்கச் செய்கின்றவன், நன்மை எல்லாம் அவன் கைவசமே இருக்கின்றன. அவன் எல்லாவற்றின் மீதும் சக்தி உடையவன்.

இக்கலிமாவானது அல்லாஹ்வின் முக்கிய பண்புகள் சிலவற்றை எடுத்துக் கூறுகின்றது. அவற்றை நாம் அறிந்திருப்பது மிகவும் அவசியமாகும். மேலும் இக்கலிமதுத் தவ்ஹீதானது ஏகத்துவத்தையும் சத்தியத்தையும் வலியுறுத் துவதுடன் எமது ஈமானையும் பலப்படுத்துகிறது. ஷிர்க்கிலிருந்தும் (இணைவைத்தல்) நம்மைப் பாதுகாக்கிறது.

ஆகவே,

கலிமதுத் தவ்ஹீத் போதிக்கும் கருத்துக்களை அறிந்து கொள்வோம்.

காலையிலும் மாலையிலும் பர்ளுத் தொழுகைகளுக்குப் பின்னரும் அதனை ஓதி வருவதை வழக்கமாக்கிக் கொள்வோம்.

## பயிற்சி

### பொருத்தமான சொற்களை வைத்து வெற்றிடங்களை நிரப்புக.

(நன்மைகளை, சக்தி, ஏகத்துவத்தை, அல்லாஹ், உயிர்கொடுப்பான்)

1. கலிமதுத் தவ்ஹீத் .................... வலியுறுத்துகிறது.
2. ........................ இணையில்லாதவன்.
3. அவனே ........................... மரணிக்கச் செய்வான்.
4. அவன் ............................. தன்வசம் வைத்திருப்பவன்.
5. அவன் எல்லாவற்றின் மீதும் ................. உடையவன்.

## செயற்பாடு

கலிமதுத் தவ்ஹீதையும் அதன் பொருளையும் மனனமிட்டு ஆசிரியரிடம் ஒப்புவிக்குக.

# 4 வேதங்களும் ஸுஹுபுகளும்

அல்லாஹ் மனிதனைப் படைத்தான். மக்களுக்கு நல்வழியைக் காண்பித்தான். அவனது வழிகாட்டல்கள் சில ஸுஹுபுகள் என்றும் இன்னும் சில வேதங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

## ஸுஹுபுகள்

ஸுஹுபுகள் என்பது வேதக் கட்டளைகளைக் குறிக்கின்றது. அவற்றுள் அல்லாஹ்வின் வழிகாட்டல்களும் போதனைகளும் அடங்கும். அவை நபிமார்கள், ரஸூல்மார்கள் மூலம் மக்களுக்குப் போதிக்கப்பட்டுள்ளன.

அவை பின்வருமாறு வழங்கப்பட்டிருந்தன.

| | |
|---|---|
| 1. ஆதம் அலைஹிஸ்ஸலாம் | 10 ஸுஹுபுகள் |
| 2. ஷீது அலைஹிஸ்ஸலாம் | 50 ஸுஹுபுகள் |
| 3. இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் | 30 ஸுஹுபுகள் |
| 4. இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் | 10 ஸுஹுபுகள் |
| 5. மூஸா அலைஹிஸ்ஸலாம் | 10 ஸுஹுபுகள் |
| **மொத்தம்** | **110 ஸுஹுபுகள்** |

## வேதங்கள்

அல்லாஹ் வேதங்களை ரஸூல்மார்களுக்கு அருளினான். அவை அவனது வழிகாட்டல்கள், போதனைகள், சட்ட திட்டங்கள் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தன.

அவை ஒவ்வொரு ரஸூலுக்கும் வெவ்வேறு காலகட்டங்களில் அருளப்பட்டுள்ளன.

1. தவ்ராத் வேதம் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அபரானி மொழியில் அருளப்பட்டது.
2. ஸபூர் வேதம் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு யூனானி மொழியில் அருளப்பட்டது.
3. இன்ஜீல் வேதம் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு சுர்யானி மொழியில் அருளப்பட்டது.
4. புர்கான் வேதம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அரபு மொழியில் அருளப்பட்டது.

இதனைப் பின்வருமாறு பாடலாகவும் இசைக்கலாம்.

| | | |
|---|---|---|
| தவ்றாத் | மூஸா | அபரானி |
| ஸபூர் | தாவூத் | யூனானி |
| இன்ஜீல் | ஈஸா | சுர்யானி |
| புர்கான் | முஹம்மத் | அரபானி |

அல்லாஹ் மனிதனுக்கு வேதங்கள் ஸுஹுபுகள் மூலம் வழிகாட்டினான் என்பதை ஏற்று நம்பிக்கை கொள்வோம். இறுதி வேதமான புர்கானை (அல்குர்ஆனை)ப் பின்பற்றி வாழ்வோம்.

## பயிற்சி

### அ. சுருக்கமான விடை தருக.

1. அதிகமாக ஸுஹுபுகளைப் பெற்ற நபியின் பெயர் யாது?
2. வேதம், ஸுஹுப் இவை இரண்டும் கொடுக்கப்பட்ட நபியின் பெயரைத் தருக.
3. ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் கொடுக்கப் பட்ட வேதம் எது?
4. கடைசியாக அருளப்பட்ட வேதம் எது?
5. மொத்தமாக வழங்கப்பட்ட ஸுஹுபுகளின் எண்ணிக்கை யாது?

### ஆ. இடைவெளிகளை நிரப்புக.

| | | |
|---|---|---|
| ............ | மூஸா | அபரானி |
| ஸபூர் | தாவூத் | ............ |
| இன்ஜீல் | ............ | சுர்யானி |
| புர்கான் | முஹம்மத் | ............ |

# 5 ரஸூல்மார்கள்

அல்லாஹ் வேதங்களையும் ஸுஹுபுகளையும் நபி மார்களுக்கும் ரஸூல்மார்களுக்கும் வழங்கினான். இவர்கள் மக்களுக்கு நேர்வழிகாட்டினார்கள். நல்லதை ஏவினார்கள். தீயதைத் தடுத்தார்கள். முன்மாதிரியாக வாழ்ந்தார்கள். எனவே, மக்கள் அவர்களைப் பின்பற்றினார்கள்.

நபிமார்களும் ரஸூல்மார்களும் மனிதர்களாவர். அவர்கள் தொழில் செய்தார்கள். குடும்பம் நடத்தினார்கள். அவர்கள் மனிதர்களில் மிகச் சிறந்தவர்களாவர். அல்லாஹ் அவர்களைத் தேர்ந்தெடுத்து வஹீ மூலம் வழிகாட்டல்களை வழங்கினான். மேலும் அவர்களுக்கு அற்புதங்களையும் வழங்கினான். அவை **முஃஜிஸாத்** எனப்பட்டன.

அவர்கள் தாம் பெற்ற வழிகாட்டல்களை மக்களிடம் முன்வைத்தார்கள். அதன் அடிப்படையில் வாழ்ந்து காட்டினார்கள். மக்கள் அவர்களை ஏற்றுப் பின்பற்றினார்கள். சிலர் அவர்களது போதனைகளை மறுத்தார்கள். அவர்களது போதனைகளுக்கு எதிராகச் செயற்பட்டார்கள். அவர்களைத் துன்புறுத்தினார்கள்.



அவ்வேளையில் அவர்கள் பொறுமையாக இருந்தார்கள். அந்த மக்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தார்கள். அவர்களிடம் சிறந்த அறிவு, நுணுக்கம், விவேகம், ஒழுக்கம், முன்மாதிரி போன்றன காணப் பட்டன.

நபிமார்களையும் ரஸூல்மார்களையும் விசுவாசிப்போம். முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஏற்றுப் பின்பற்றுவோம்.

## பயிற்சி

**இணைக்குக.**

| அ | ஆ |
|---|---|
| நபிமார்களுக்கு வழங்கப்பட்டவை | அறிவு, நுணுக்கம், விவேகம், ஒழுக்கம் |
| ரஸூல்மார்களின் பணி | குடும்பம் நடத்தல், தொழில் செய்தல் |
| ரஸூல்மார்களிடம் காணப்பட்ட பண்புகள் | ஸுஹுபுகளும் வேதங்களும் |
| ரஸூல்மார்கள் மனிதர்கள் என்ற வகையில் செய்தவை | அல்லாஹ்வின் தூதை எத்தி வைத்தல் |

# 6 இறுதித் தூதர்
## முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அல்லாஹ் அனுப்பிய நபிமார்களில் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறுதியானவராவார்கள்.

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவில் பிறந்தார்கள். அப்போது மக்கள் **ஜாஹிலிய்யா** எனும் அறியாமையில் மூழ்கியிருந்தார்கள்.

மக்களின் அறியாமையைக் கண்ட முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதிகம் கவலையடைந்தார்கள். மக்காவில் இருந்த ஹிராக் குகைக்குச் சென்று தனித்திருந்து தனது சமூகத்தின் நிலைபற்றிக் கவலைப்பட்டார்கள். அப்போது தான் மக்களை நல்வழிப்படுத்த அல்லாஹ் இறுதி வேதமான அல்குர்ஆனின் வசனங்களை இறக்கி வைத்தான்.


ஹிராக் குகை

அல்குர்ஆனில் உள்ள வசனங்கள் அன்றைய மக்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்தன. அந்த மக்கள் நல்லவர்களாக வாழ வழிவகுத்தன. அல்குர்ஆன் காலத்தால் அழியாத வேதமாகும்.

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தோழர்கள் ஸஹாபாக்கள் என அழைக்கப்பட்டார்கள். இறுதி வேதமான அல்குர்ஆன் ஸஹாபாக்களுக்கு மட்டுமன்றி இன்று வாழும் எங்களுக்கும் இனி வரப்போகின்ற மக்களுக்கும் வழிகாட்டியாக இருக்கின்றது.

இதனை அல்குர்ஆன்

**''அலிப் லாம் மீம். இது, (அல்லாஹ்வின்) திருவேதமாகும்; இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை; பய பக்தியுடையோருக்கு (இது) நேர்வழிகாட்டியாகும். (2:1,2)''** என்று சொல்கிறது.

மேற்படி அல்லாஹ்வின் திருவசனங்கள் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் ஊடாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அருளப்பட்டன.

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கமைய தனது வாழ்வை அமைத்துக் கொண்டார்கள்.

அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் அனைத்தும் **அஸ்ஸுன்னா** அல்லது **அல்ஹதீஸ்** என அழைக்கப்படுகிறது.

எனவே நாமும் இறுதி வேதமாகிய அல்குர்ஆனின் கட்டளைகளையும் இறுதித் தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிகாட்டல்களையும் பின்பற்றி ஈருலகிலும் வெற்றி பெற உறுதி கொள்வோம்.

## பயிற்சி

### சுருக்கமான விடை தருக.

1. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறக்கும்போது மக்கள் எதில் மூழ்கியிருந்தார்கள்?
2. மக்காவிலுள்ள ஹிராக் குகையில் இருந்துகொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எதைப்பற்றிக் கவலைப்பட்டார்கள்?
3. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தோழர்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறார்கள்?
4. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் அனைத்தும் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
5. நாம் ஈருலகிலும் வெற்றி பெற எவற்றைப் பின்பற்ற வேண்டும்?

# 7 இறுதி வேதம் அல்குர்ஆன்




அல்லாஹ் வேதங்களை அருளி மக்களுக்கு வழிகாட்டினான். அவன் அருளிய இறுதி வேதம் அல்குர்ஆன் ஆகும். அதற்கு முன்னர் பல வேதங்கள் அருளப்பட்டன. அவை அனைத்தும் காலாவதியாகிவிட்டன. இறுதி வேதமாக அல்குர்ஆன் அமைந்துள்ளது.

இது முழுமையானது. பாதுகாக்கப்பட்டுள்ளது. அதனை மாத்திரமே பின்பற்ற வேண்டும். அது அல்லாஹ்விடமிருந்து ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் மூலம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அருளப்பட்டது. அதனை அவர்கள் மக்களுக்கு ஓதிக் காண்பித்தார்கள். போதித்தார்கள். அதனைப் பின்பற்றுமாறு மக்களை அழைத்தார்கள். அது அருளப்பட்ட போது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஸஹாபாக்களும் அதனை மனனம் செய்து கொண்டார்கள். அதனை எழுதி வைப்பதற்காகச் சில ஸஹாபாக்களை நியமித்தார்கள். அவர்கள் **‘குத்தாபுல் வஹி’ (வஹியை எழுதுவோர்)** என அழைக்கப்பட்டார்கள்.

பின்னர் கலீபா அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் அல்குர்ஆன் நூல் வடிவில் தொகுக்கப்பட்டது. அது முஸ்ஹப் எனப்படுகிறது. அச்சு வசதி இல்லாத அக்காலத்தில் ஒருசில எழுத்துப் பிரதிகளே காணப்பட்டன. பின்னரே அச்சுப் பிரதிகள் வெளியாகின. இன்று அதற்குப் பல மொழி பெயர்ப்புகளும் விளக்க நூல்களும் காணப் படுகின்றன.

எனவே அல்குர்ஆனை நாம்

- தினமும் ஓதுவோம்.
- அது ஓதப்படும்போது காது தாழ்த்திச் செவிமடுப்போம்..
- அதனை மனனமிடுவோம்.
- அதன் போதனைகளை விளங்குவோம்.
- அவற்றை எமது வாழ்வில் எடுத்து நடப்போம்.

## பயிற்சி

### வெற்றிடங்களை நிரப்புக

1. எமது வேத நூல் ............................ ஆகும்.
2. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்குர்ஆனைக் கொண்டு வந்தவர் ........................ அவர்கள் ஆவார்.
3. நாம் தினமும் அல் குர்ஆனை ...................... வர வேண்டும்.
4. அல்குர்ஆன் வசனங்களை எழுதி வைத்தவர்கள் ................. எனப்பட்டனர்.
5. அல் குர்ஆன் .................................... காலத்தில் நூல் வடிவில் தொகுக்கப்பட்டது.

# 8 அல்குர்ஆனின் சிறப்புகள்

அருள்மறையாம் அல்குர்ஆன்
அல்லாஹ்வின் அருட்கொடையாம்
உலகிலுள்ள அனைத்திலுமே
உயர்ந்ததொரு பொக்கிஷமாம்

எழுத்து ஒன்றை ஓதிட்டால்
பத்து நன்மை கிடைத்திடுமே
மறை ஓதும் வீடுகளில்
‘பரகத்து’ப் பெருகிடுமே

மறையதனை மனனமிட்டால்
மகிமையும் உயர்ந்திடுமே
மலக்குகளின் துஆக்களும்
நிறைவாகக் கிடைத்திடுமே



மறை வேதம் ஓதி வந்தால்
மன அமைதி கிடைத்திடுமே
மறுமையில் நின்றெமக்காய்
மன்றாட வந்திடுமே

நாம் கற்ற மறையதனை
நண்பருக்கும் கற்பிப்போம்
வல்லோனாம் அல்லாஹ்வின்
நிறையருளைப் பெற்றிடுவோம்.

♦ **கவிதாயினி எச்.எப். ரிஸ்னா**

## பயிற்சி

அல்குர்ஆனின் சிறப்புகள் ஐந்தைத் தருக.

1.

2.

3.

4.

5.



# 9 வுழூ

தொழுகை போன்ற சில கடமைகளை நிறைவேற்றுவதற்கு வுழூ செய்துகொள்வது அவசியமாகும்.

வுழூவை உரிய முறையில் நிறைவேற்றுவது முக்கியமானதாகும்.





எனவே, வுழூவின் ஷர்த்துக்களையும் பர்ளுகளையும் முப்திலாத்துக்களையும் அறிந்து பின்பற்றி நடப்போம்.

### வுழூவின் ஷர்த்துக்கள் (நிபந்தனைகள்)

- முஸ்லிமாக இருத்தல்.
- பிரித்தறியும் புத்தி உள்ளவராயிருத்தல்.
- வுழூ செய்வது பர்ளு என்று அறிதல். (தம்யீஸ்)
- வுழூவின் விதிகளை அறிதல்..
- வுழூ செய்யத் தகுதியான துப்பரவான நீரைத் தேடுதல்.
- வுழூவின் பர்ளான உறுப்புகளில் தண்ணீரைத் தடுக்கும் பொருட்கள் ஒட்டியிருந்தால் அதனை நீக்குதல். (உதாரணம் - தார், பிசின், சுவிங்கம், சுண்ணாம்பு போன்றன)

## வுழூவின் பர்ளுகள் (கட்டாயம் செய்யப்பட வேண்டியவை)

- ✳ நிய்யத் வைத்தல் - மனதால் எண்ணுதல்.
- ✳ நிய்யத்துடன் முகத்தைக் கழுவுதல்.
- ✳ இரு கைகளையும் முழங்கை உட்படக் கழுவுதல்.
- ✳ தலையை நீரினால் தடவுதல். (மஸ்ஹு செய்தல்)
- ✳ இரு கால்களையும் கரண்டை உட்படக் கழுவுதல்.
- ✳ ஒழுங்கு முறைப்படி செய்தல்.

## வுழூவின் முப்திலாத்துக்கள்
## (வுழூவை முறிக்கும் செயல்கள்)

1. மலசலம் கழித்தல்.

2. சுய அறிவு நீங்குதல் - போதை, பைத்தியம், மயக்கம் போன்றவற்றால் சுய அறிவை இழத்தல்.

3. திரையின்றி உள்ளங்கையால் மர்மஸ்தானத்தைத் தொடுதல்.

4. விவாகம் முடிக்க அனுமதிக்கப்பட்ட ஆண் - பெண்களின் உடல் உறுப்புக்கள் திரையின்றி படுதல்.

5. மலத் துவாரத்தால் காற்று வெளியேறுதல்.

வுழூவை முறிக்கக் கூடிய இந்தச் செயல்களில் ஏதாவது ஒன்று நடந்தால் வுழூ முறிந்து விடும்.

வுழூ முறிந்தால் நாம் மீண்டும் வுழூச் செய்து கொள்ள வேண்டும்.

நாம் எப்போதும் வுழூவுடன் இருப்பது நல்ல பழக்கமாகும்.

## பயிற்சி

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. வுழூ செய்யத் தகுதியான துப்பரவான நீரைத் தேடுதல்
   (ஷர்த்து, பர்ளு)

2. நிய்யத்துடன் முகத்தைக் கழுவுதல்
   (ஸுன்னத், பர்ளு)

3. மஸ்ஹு செய்தல் என்பது
   (தலையைக் கழுவுதல், தலையை நீரால் தடவுதல்)

4. கைகளைக் கழுவுவதற்கான எல்லை
   (கரண்டை, முழங்கை)

5. மலத் துவாரத்தால் காற்று வெளியாதல் வுழூவை
   (முறிக்காது, முறிக்கும்)

# 10 தொழுகையின் முக்கியத்துவம்

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மிஃராஜின் போது வழங்கப்பட்ட அன்பளிப்பே தொழுகையாகும். அது இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. இஸ்லாத்தை ஏற்ற ஒருவர் முதலில் நிறைவேற்ற வேண்டிய கடமை அதுவாகும். தொழுகையே முஸ்லிமுக்கும் முஸ்லிம் அல்லாதோருக்கும் இடையிலான வேறுபாடாகும். தொழுகையை நிறைவேற்றாதவர் இஸ்லாத்தை விட்டும் நீங்கியவராகவே கருதப்படுவார்.



தொழுகை மிக முக்கிய கடமை என்பதாலேயே அல்லாஹ் ஒவ்வொரு நபி மீதும் அதனை விதித்திருந்தான். முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன்னர் வந்த எல்லா நபிமார்களும் தொழுகையை நிறைவேற்றி வந்தனர். தமது உம்மத்தினருக்கும் தொழுகையை நிறைவேற்றும்படி பணித்தனர். அதில் அசிரத்தைக் காட்டுவது பாவமாகும். அதனை நிறைவேற்றாதிருப்பது நரகத்துக்கு இட்டுச் செல்லும் ஒரு குற்றமாகும். எனவே தன்மீது கடமையான இத் தொழுகையை ஒரு முஸ்லிம் தனது வாழ்வின் இறுதி மூச்சு வரை கடைப்பிடித்து வருவது அவசியமாகும்.

முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மரணப் படுக்கையில் இருக்கும்போது கூட தொழுகையைக் கடைப்பிடித்தார்கள். நெருக்கடி நிறைந்த சூழலிலும் தொழுகையைக் கொண்டே தன் உம்மத்தினருக்கு வஸிய்யத் செய்தார்கள். மேலும், ஒரு பிள்ளை ஏழு வயதானதும் தொழுது வரும்படி ஏவுமாறும் பத்து வயதாகியும் தொழவில்லையெனில் கண்டித்தேனும் தொழ வையுங்கள் எனவும் வழிகாட்டியுள்ளார்கள்.

மறுமை நாளில் அல்லாஹ் அடியானிடம் முதலில் விசாரிப்பது தொழுகை பற்றியேயாகும். தொழுகை சீராக அமைந்தால் அவனது அனைத்து செயல்களும் சீராகிவிடும். அது சீர்கெட்டால் அனைத்துமே சீர்கெட்டுவிடும்.

அடியான் செய்யும் நல்லமல்களில் மிகவும் சிறந்தது உரிய நேரத்தில் தொழுகையை நிறைவேற்றுவதாகும் என முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போதித்திருப்பதானது தொழுகையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறதல்லவா?

வாழ்வின் எத்தகைய சந்தர்ப்பத்திலும் ஒரு முஸ்லிம் தொழுகையைத் தவற விடவே கூடாது. பயணத்திலிருக்கும் வேளையிலும் தொழ வேண்டும். வுழூ செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் **தயம்மும்** செய்து தொழ வேண்டும். கொடூர யுத்த அபாயம் சூழ்ந்த வேளையிலும் தொழுதே ஆக வேண்டும். மேற்சொல்லப்பட்ட சூழ்நிலைகளின்போது கூட கண்டிப்பாக தொழுதே ஆக வேண்டும். அத்தகைய சந்தர்ப்ப சூழ்நிலைகளில் தொழுவதற்கான ஒழுங்கு முறைகளை இஸ்லாம் கற்றுத் தந்துள்ளது.

எனவே அன்றாட வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் எல்லாவிதமான சூழ்நிலைகளிலும் தொழுகையைத் தவறாது நிறைவேற்றி வர வேண்டும். அற்ப காரணங்களுக்காக ஒருபோதும் தொழுகையைத் தவற விடவே கூடாது.

வீட்டிலோ, பாடசாலையிலோ இடம்பெறும் நிகழ்வுகளின் போதும் தவறாது தொழுகையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒருவருக்கொருவர் அதனை நினைவுபடுத்திக்கொள்ளவும் வேண்டும்.

இனி ஒருபோதும் தொழுகையைத் தவறவிடுவதே இல்லையென உறுதிகொண்டு உயிர் பிரியும் வரை அதனைக் கடைப்பிடித்து வருவோம்.

## பயிற்சி

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

1. முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஹிஜ்ரத்தின்போது வழங்கப்பட்ட பரிசு தொழுகையாகும். ( )

2. மறுமையில் முதலில் விசாரிக்கப்படுவது தொழுகை பற்றியாகும். ( )

3. ஐம்பெரும் கடமைகளில் தொழுகை முதலாவதாகும். ( )

4. எல்லா நபிமார்களுக்கும் தொழுகை வழங்கப் பட்டிருந்தது. ( )

**இடைவெளி நிரப்புக.**

(செயல்கள், பத்து, தொழுகை, இறுதி மூச்சு, முதலில்)

1. மறுமை நாளில் அல்லாஹ், அடியானிடம் .................. விசாரிப்பது தொழுகை பற்றியே ஆகும்.

2. ஒரு மனிதனது தொழுகை சீரானால் அவனது அனைத்து ........................ சீராகிவிடும்.

3. முஸ்லிமான ஒரு பிள்ளை ................ வயதாகியும் தொழாவிட்டால் கண்டித்தேனும் தொழ வைக்க வேண்டும்.

4. மரணப் படுக்கையிலிருந்துகொண்டு ................ பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போதித்தார்கள்.

5. ...................... வரை நிறைவேற்றியே ஆக வேண்டிய கடமை ஒன்றாக தொழுகை உள்ளது.

## செயற்பாடு

உமது நண்பனுக்கு/ நண்பிக்கு தொழுகையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி ஒரு கடிதம் எழுதுக.

# 11 தொழுகையை நிறைவேற்றுவோம்

இரண்டாம் பாடத்திற்காக மணி ஒலித்தது. 4 ஆம் தர மாணவர்கள் இஸ்லாம் பாட ஆசிரியரின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆசிரியர் ஸலாம் கூறிக்கொண்டு வகுப்பில் நுழைந்தார். மாணவர்கள் ஸலாமுக்கு பதில் கூறி ஆசிரியரை வரவேற்றார்கள்.

ஆசிரியர் - அன்பார்ந்த மாணவர்களே! நாம் கடந்த பாடத்தில் தொழுகையின் முக்கியத்துவம் பற்றிப் பார்த்தோம். இன்று தொழுகையின் பர்ளுகள், ஷர்த்துகள் பற்றிப் பார்ப்போம். பர்ளு, ஷர்த்து என்றால் என்னவென்று ஹாதியா கூறுங்கள் பார்ப்போம்.

ஹாதியா - நான் மத்ரஸாவில் ஓதும்போது முஅல்லிம் கற்றுத் தந்தது நினைவிருக்கிறது. அதாவது ஒரு கடமையை நிறைவேற்றும்போது கட்டாயம் செய்ய வேண்டியவை பர்ளுகள் என்றும் அக்கடமையை நிறைவேற்ற முன்னர் பூர்த்தி செய்திருக்க வேண்டிய நிபந்தனைகள் ஷர்த்துக்கள் என்றும் கூறினார்.

ஆசிரியர் - சரியாகச் சொன்னீர்கள் ஹாதியா. தற்போது ஹம்தா தொழுகையின் பர்ளுகள், ஷர்த்துகள் எத்தனை என்று சொல்லுங்கள் பார்ப்போம்.

ஹம்தா- ஸேர் பர்ளுகள் பத்தொன்பது. ஷர்த்துகள் பத்து.

ஆசிரியர் - நல்லது இப்போது நாம் அந்த பர்ளுகள், ஷர்த்துகளைப் பார்ப்போம். (என்று கூறியவாறு தான் தயாரித்து வந்த இரண்டு அட்டவணைகளை சுவரில் தொங்கவிட்டார்)

அஷ்பாக் நீங்கள் முதலில் ஷர்த்துகளை வாசியுங்கள்.

### தொழுகையின் ஷர்த்துகள் 10

1. முஸ்லிமாக இருத்தல்
2. ஒன்றை விளங்கிக் கொள்ளும் நிலையிலிருத்தல்
3. சுத்தமாயிருத்தல் (வுழூ/ குளிப்பு)
4. உடல், உடை ,இடம் ஆகியன சுத்தமானதாக இருத்தல்
5. மறைக்கப்பட வேண்டிய பகுதிகளை (அவ்ரத்தை) மறைத்தல்
6. கிப்லாவை முன்னோக்குதல்
7. தொழுகை தன் மீது கடமை என்பதனை உணர்தல்
8. தொழுகையின் நேரத்தை அடைந்திருத்தல்
9. தொழும் முறையை அறிந்திருத்தல்
10. பர்ளை பர்ள் எனவும் ஸுன்னத்தை ஸுன்னத் எனவும் அறிந்திருத்தல்

ஆசிரியர் - நல்லது இப்போது யூஸுப் தொழுகையின் பர்ளுகளை வாசியுங்கள்.

## தொழுகையின் பர்ளுகள்

1. அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன் என மனதில் நிய்யத் வைத்தல்
2. நின்று தொழ சக்தி பெற்றவர்கள் நின்று தொழுதல்
3. ஆரம்பத் தக்பீர் (தஹ்ரீம்) சொல்லல்
4. பிஸ்மிலுடன் ஸூறதுல் பாத்திஹாவை ஓதுதல்
5. றுகூஉ செய்தல்
6. அதில் தாமதித்தல்
7. இஃதிதாலுக்கு வருதல்
8. அதில் தாமதித்தல்
9. முதலாம் ஸுஜூது செய்தல்
10. அதில் தாமதித்தல்
11. நடு இருப்புக்கு வருதல்
12. அதில் தாமதித்தல்
13. இரண்டாம் ஸுஜூது செய்தல்
14. அதில் தாமதித்தல்
15. கடைசி அத்தஹிய்யாத்துக்காக உட்கார்தல்
16. அதில் அத்தஹிய்யாத் ஓதுதல்
17. அத்தஹிய்யாத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்து கூறல்
18. முதல் ஸலாம் கூறுதல்
19. மேற்கூறியவற்றை ஒழுங்குமுறைப்படி செய்தல்

ஆசிரியர்- நல்லது மாணவர்களே! இப்போது தொழுகையின் ஒவ்வொரு நிலையிலும் ஓத வேண்டியவற்றைப் பின்வரும் படங்கள் மூலம் அறிந்துகொள்ளலாம்.

### 1. ஆரம்பத் தக்பீர்

اَللّٰهُ أَكْبَرُ

அல்லாஹு அக்பர்



### 2. ஆரம்ப நிலை

1. வஜ்ஜஹ்த்து
2. ஸூரத்துல் பாத்திஹா
3. ஒரு சிறிய ஸூரா அல்லது சில ஆயத்துகள்



## 3. ருகூஉ



سُبْحَانَ رَبِّيَ
الْعَظِيْمِ وَبِحَمْدِهِ

ஸுப்ஹான ரப்பியல் அழீம் வபிஹம்திஹி

## 4. நிலைக்கு வருதல்

سَمِعَ اللهُ لِمَنْ حَمِدَهُ

ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா



## 5. இஃதிதால் எனும் நிலை



رَبَّنَا لَكَ الْحَمْدُ مِلْءَ السَّمَاوَاتِ وَمِلْءَ الأَرْضِ وَمِلْءَ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ.

ரப்பனா லகல் ஹம்து மில்அஸ் ஸமாவாதி வமில்அல் அர்ழி அமில்அ மாஷிஃத மின் ஷைஇன் பஃத்

## 6. ஸுஜூத்






ஸுப்ஹான ரப்பியல் அஃலா வபிஹம்திஹி

## 7. நடு இருப்பு



رَبِّ اغْفِرْ لِيْ وَارْحَمْنِيْ
وَاجْبُرْنِيْ وَارْفَعْنِيْ
وَارْزُقْنِيْ وَاهْدِنِيْ وَعَافِنِيْ

ரப்பிஃஃபிர்லீ வர்ஹம்னீ வஜ்புர்னீ வர்பஃஃனீ
வர்ஸுுக்னீ வஹ்தினீ வஆபினீ


## 8. அத்தஹிய்யாத்

1. அத்தஹிய்யாத் ஓதுதல்
2. ஸலவாத் ஓதுதல்



## 9. ஸலாம் கொடுத்தல்






ஆசிரியர் - ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறும்போது 'அல்லாஹு அக்பர்' என்று கூறிக்கொள்ள வேண்டும். ருகூவிலிருந்து எழும்போது மாத்திரம் 'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா' என்று கூற வேண்டும்.

## பயிற்சி

### சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. நின்று தொழ முடியுமானவர் நின்று தொழுதல் ( பர்ளு, ஷர்த்து) ஆகும்.
2. ஸுப்ஹான ரப்பியல் அழீம் வபிஹம்திஹி எனும் துஆ ஓதுவது (ருகூவில், ஸுஜூதில்) ஆகும்.
3. தக்பீர் தஹ்ரீமா என்பது (தக்பீர் கட்டுதல், ஆரம்பத் தக்பீர் சொல்லுதல்) ஆகும்.
4. ருகூவிலிருந்து நிலைக்கு வருதலைக் குறிப்பது (இஃதிதால், ஸுஜூத்) ஆகும்.

### சுருக்கமான விடை தருக.

1. தொழுகையின் ஷர்த்துக்கள் மூன்றை எழுதுக.
2. தொழுகையில் நடு இருப்பில் ஓத வேண்டிய துஆவைத் தமிழில் எழுதுக.

## செயற்பாடு

ஸூரா பாத்திஹாவை மனனமிட்டு உமது ஆசிரியரிடம் ஓதிக்காட்டுக.

# 12 ஸூரத்துல் பலக்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِ ۙ﴿۱﴾ مِنْ شَرِّ مَا خَلَقَ ۙ﴿۲﴾ وَمِنْ شَرِّ

غَاسِقٍ اِذَا وَقَبَ ۙ﴿۳﴾ وَمِنْ شَرِّ النَّفّٰثٰتِ فِى الْعُقَدِ ۙ﴿۴﴾

وَمِنْ شَرِّ حَاسِدٍ اِذَا حَسَدَ ﴿۵﴾

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ஓதுகிறேன்

1. (நபியே!) நீங்கள் கூறுங்கள்.

அதிகாலையின் இறைவனிடத்தில் நான் பாதுகாப்பைத் தேடுகிறேன்.

2. அவன் படைத்தவற்றின் தீங்கை விட்டும்,

3. இருள் பரவும் போது ஏற்படும் இரவின் தீங்கை விட்டும்,

4. இன்னும், முடிச்சுகளில் (மந்திரித்து) ஊதும் பெண்களின் தீங்கை விட்டும்,

5. பொறாமைக்காரன் பொறாமை கொள்ளும் போது உண்டாகும் தீங்கை விட்டும் (பாதுகாவல் தேடுகிறேன்).

ஐந்து ஆயத்துக்களைக் கொண்ட இந்த ஸூரா மக்காவில் அருளப்பட்டது. இது அல்குர்ஆனின் 113 ஆவது அத்தியாயமாகும். இது **அல் முஅவ்விததைன்** எனப்படும் இரு ஸூராக்களில் ஒன்றாகும்.

இது எமக்குப் பாதுகாப்பைத் தருகின்றது. இதனைக் காலையிலும் மாலையிலும் ஓதி வருவோர் அனைத்துத் தீமைகளில் இருந்தும் பாதுகாப்புப் பெறுவர் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

மேலும் இதனை ஐங்காலத் தொழுகைகளைத் தொடர்ந்தும், தூங்குவதற்கு முன்னரும், காலையிலும் மாலையிலும் ஓதி வருவது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காட்டித் தந்த வழிமுறையாகும்.

## பயிற்சி

### சரி பிழை கூறுக.

1. ஸூரத்துல் பலக் முஅவ்விததைன் ஸூராக்களில் ஒன்றாகும். ( )
2. இது அல்குர்ஆனின் இறுதி அத்தியாயமாகும். ( )
3. ஐங்காலத் தொழுகையின் பின் அல் அலக் ஸூராவை ஓதுவது ஸுன்னத்தாகும். ( )
4. இந்த ஸூராவை ஓதுவதன் மூலம் அல்லாஹ்வின் பாதுகாப்பு கிடைக்கின்றது. ( )

# 13 ஸூரத்துன் நாஸ்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِ (1) مَلِكِ النَّاسِ (2) اِلٰهِ النَّاسِ (3)

مِنْ شَرِّ الْوَسْوَاسِ ۙ الْخَنَّاسِ (4) الَّذِیْ یُوَسْوِسُ فِیْ

صُدُوْرِ النَّاسِ (5) مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ (6)

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ஓதுகிறேன்

1. (நபியே!) நீர் கூறுவீராக. மனிதர்களின் இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன்.

2. (அவன் தான்) மனிதர்களின் அரசன்.

3. அவனே மனிதர்களின் (வணக்கத்திற்குரிய) இறைவன்.

4. பின்னால் பதுங்கியிருந்து வீண் சந்தேகங்களைக் கிளப்பக் கூடியவனின் (ஷைத்தானின்) தீங்கை விட்டும் (நான் பாதுகாவல் தேடுகிறேன்).

5. அவன் மனிதர்களின் இதயங்களில் வீண் சந்தேகங்களைக் கிளப்பி விடுகிறான்.

6. இத்தகையோர் ஜின்களிலும் மனிதர்களிலும் இருக்கிறார்கள்.

இது மக்காவில் அருளப்பட்டது. இதில் ஆறு வசனங்கள் உள்ளன. இது அல்குர்ஆனின் 114 ஆவது ஸூராவாகும். இதுவே அல்குர்ஆனின் இறுதி ஸூராவுமாகும். இந்த ஸூராவும் இதற்கு முந்திய ஸூராவும் முஅவ்விததைன் என அழைக்கப்படுகின்றன.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த ஸூராவையும் பர்ளான தொழுகைகளைத் தொடர்ந்தும் தூங்கச் செல்லும் முன்னரும் காலையிலும் மாலையிலும் ஓதி வந்துள்ளார்கள். அவ்வாறு ஓதுபவர் அல்லாஹ்வின் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வார்.

## பயிற்சி

### சுருக்கமான விடை தருக.

1. ஸூரத்துன் நாஸ் எத்தனை வசனங்களைக் கொண்டுள்ளது.?
2. முஅவ்விததைன் எனப்படும் இரு ஸூராக்களும் எவை?
3. இந்த ஸூராவை ஓதுவதன் மூலம் கிடைக்கும் பயன் யாது?
4. இந்த ஸூராவை ஓத வேண்டிய சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.

## செயற்பாடு

ஸூரத்துன் நாஸ், ஸூரத்துல் பலக் ஆகிய ஸூராக்களை மனனமிட்டு ஆசிரியருக்கு ஓதிக் காட்டுக.

# 14 சுத்தம் பேணுவோம்

சுத்தத்தை எல்லோரும் விரும்புவார்கள். நாங்கள் மனிதர்கள். நாம் எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும். சுத்தமாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமும் புத்துணர்ச்சியும் கிடைக்கின்றது.

இஸ்லாம் சுத்தத்தை வலியுறுத்துகின்றது. அல்லாஹ் சுத்தமாக இருப்பவர்களை நேசிக்கின்றான். ''சுத்தம் ஈமானின் பாதியாகும்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

நாம் எமது உடலை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.



எனவே நாம் காலையிலும் தூங்கச் செல்ல முன்பும் பற்களைத் துலக்குவோம்.

தினமும் கை, கால், முகம் கழுவிச் சுத்தமாக இருப்போம்.

வாராந்தம் நகங்களை வெட்டி, அழுக்குகளை அகற்றுவோம்.




குளித்து உடலைச் சுத்தமாக வைத்திருப்போம்.

தலைமுடியைச் சீராகக் கத்தரித்து தலைக்கு எண்ணெய் தடவி, சீவி அழகாக வைத்திருப்போம்.

சுத்தமான ஆடைகளையே அணிந்திடுவோம்.

வாசனைத் திரவியங்களைப் பூசிக் கொள்வோம்.

பாடசாலைச் சீருடை, பாதணி, புத்தகப் பை, புத்தகங்கள் அனைத்தையும் எப்போதும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப்போம்.

பொருத்தமான ஆடை அணிகலன்களை மாத்திரமே பாடசாலைக்கு அணிந்து செல்வதை வழக்கமாக்கிக் கொள்வோம்.

வீட்டில் பயன்படுத்தும் பாவனைப் பொருட்களைத் தூய்மையாக வைத்திருப்போம்.

அனைத்துப் பொருட்களையும் உரிய இடங்களில் வைப்பதை வழக்கமாக்கிக் கொள்வோம்.



அழுக்கான ஆடைகளைக் கழுவி சுத்தம் செய்வோம்.

அவற்றை உலர்த்தி, மடித்து உரிய இடத்தில் வைத்திருப்போம்.


ஒருவர் தனது வேலையை நேர்த்தியாகச் செய்வதையே அல்லாஹ் விரும்புகிறான் என்ற நபி மொழிக்கமைய வாழ்வை அமைத்துக்கொள்ள உறுதிகொள்வோம்.

## பயிற்சி

### வெற்றிடங்களை நிரப்புக.

1. சுத்தமாக இருப்பவர்களை ...................... நேசிக்கின்றான்.
2. காலையிலும் ................ முன்பும் பல் துலக்கி சுத்தம் செய்ய வேண்டும்.
3. ......................... நகங்களை வெட்டி சுத்தம் பேணுவோம்.
4. ஒருவர் தனது வேலையை ...................... செய்வதையே அல்லாஹ் விரும்புகின்றான்.

# 15 எமது வீடு



இது எமது வீடு. இது அல்லாஹ் எமக்களித்த அருட்கொடை. இதில் நாம் குடும்பமாக வசித்து வருகிறோம். இதில் எமக்கு அமைதியும் பாதுகாப்பும் கிடைக்கிறது. இதனை நாம் சுத்தமாகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் வைத்திருக்க வேண்டும்.

வீட்டின் உட்புறத்தைத் தூய்மையாக வைத்திருப்போம். வீட்டின் சுவர்கள், தளங்கள், வரவேற்பறை, படுக்கையறை, சமையலறை, குளியலறை, கழிவறை மற்றும் ஏனைய அறைகளைச் சுத்தமாக வைத்திருப்போம். அவற்றைத் தினமும் தொற்று நீக்கி சுத்தம் செய்து அழகாகவும் மணமாகவும் வைத்திருப்போம்.

வீட்டின் பாவனைப் பொருட்களான தளபாடங்கள், திரைச்சீலைகள், படுக்கை விரிப்புக்கள் மற்றும் ஏனைய

வீட்டுப் பொருட்கள் போன்றவற்றைத் தூய்மையாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப்போம். மேலும் அவற்றை அவற்றுக்கே உரிய இடங்களில் வைத்திருக்க உதவுவோம்.

பாத்திரங்களைத் தூய்மையாக வைத்திருப்பதோடு அவற்றை மூடியும் வைத்திருப்போம். வீட்டின் சுற்றுச் சூழலை தினமும் கூட்டிப் பெருக்கித் தூய்மையாக வைத்திருப்போம். பூஞ்செடிகளையும் பயன் தரும் மரங்களையும் நடுவோம். அவற்றை நீரிட்டு உரமிட்டுப் பராமரிப்போம்.

நாம் அனைவரும் எமது வீட்டில் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டும். தினமும் அல்குர்ஆன் ஓதுதல், தொழுதல், திக்ர் செய்தல் முதலான நற்செயல்களால் வீட்டை அலங்கரிக்க வேண்டும். இவ்வாறான நற்செயல்கள் காரணமாக அல்லாஹ் எமது வீட்டுக்கும் குடும்பத்திற்கும் அருள்பாலிக்கின்றான். எனவே நாம் அல்லாஹ்விற்கு மேலும் மேலும் நன்றி செலுத்துவோம்.

## பயிற்சி

**சுருக்கமான விடை தருக.**

1. எமது வீட்டைச் சுத்தமாக வைத்திருக்க நாம் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள் மூன்றைத் தருக.

2. தொற்றுநீக்கியால் சுத்தம் செய்ய வேண்டிய இடங்கள் மூன்றை எழுதுக.

3. வீட்டை அழகாக வைப்பதற்கு எவ்வாறான வழிமுறைகளைக் கையாள வேண்டும்?

5. அல்லாஹ்வின் அருளைப் பெறுவதற்காக எமது வீட்டில் நாம் செய்யும் செயல்கள் மூன்றைக் குறிப்பிடுக.

# 16 சுற்றாடலைப் பேணுவோம்

நாம் வாழும் சுற்றாடல் அல்லாஹ்வின் அருளாகும். அல்லாஹ் எமக்கு அளித்துள்ள இந்த அருளை நாம் பேணிப் பாதுகாப்பது எமது கடமையாகும்.

நிலம், நீர், வளி, தாவரம், உயிரிகள், பௌதீகப் பொருட்கள் முதலானவை எமது சுற்றாடலில் அடங்குவனவாகும்.

நிலம், நீர், வளி ஆகியவற்றை மாசடையாது பாதுகாப்பதோடு அவற்றைப் பேணுவதைச் சுற்றாடலைப் பாதுகாத்தல் என்கிறோம்.

இஸ்லாம் எமது சுற்றாடலைப் பாதுகாக்கும் வழிமுறைகளைக் காட்டித் தந்துள்ளது.



மரங்களை நட்டி பசுமையைப் பேணி அவற்றை அழியாமல் பாதுகாப்பதும் தூய்மையாய் வைத்திருப்பதும் நாம் நிலத்தைப் பாதுகாக்கும் வழிமுறைகளாகும்.

‘‘மறுமை நாள் வரும் நிலையிலும் உமது கையில் ஒரு செடி இருந்தால் அதனை நட்டுவிடுவீராக’’ என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

எமக்கு அருளாகக் கிடைத்த நீரை நாம் பாதுகாக்க வேண்டும். நீரை வீண்விரயம் செய்யாது சிக்கனமாகப் பயன்படுத்த வோண்டும். நீர் நிலைகளில் அழுக்குகளை வீசுவது, அதனை மாசுபடுத்துவது, கழிவு நீரைக் கலக்கிவிட்டு சுற்றாடலை மாசுபடுத்துவது போன்றன பாவச் செயல்களாகும்.

‘‘உங்களில் எவரும் தேங்கி நிற்கும் நீரில் சிறுநீர் கழித்து மாசுபடுத்த வேண்டாம்.’’ என்றும்

‘‘நிழல் மற்றும் கனி தரும் மரங்களின் கீழும் நீர் நிலைகளிலும் மலசலம் கழித்து அசுத்தப்படுத்த வேண்டாம்’’ என்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

வீட்டுக்குச் செல்லும் பாதைகளையும் வடிகால்களையும் நாம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். வாரத்திற்கு ஒரு முறையேனும் அவற்றைக் குடும்பத்தாருடனும் நண்பர்களுடனும் அயலவர்களுடனும் சேர்ந்து சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபட வேண்டும்.

வீட்டில் சேரக் கூடிய குப்பைகளையும் கழிவுகளையும் முறையாகப் பிரித்து உரிய இடங்களில் இடவேண்டும். வச தியிருப்பின் குப்பைகளைப் பயன்படுத்தி இயற்கைப் பசளை தயாரித்து அவற்றை வீட்டுத் தோட்டம் செய்யப் பயன்படுத்த வேண்டும்.

முறையற்ற விதத்தில் குப்பைகளை எரித்தல், அதிக சப்தமாக ஒலியெழுப்புதல், துர்வாடை ஏற்படுத்தும் அழுக்குகளை வீசுதல் முதலிய செயல்கள் எமது வளிமண்டலத்தை மாசடையச் செய்கின்றன. எனவே, நாம் அவ்வாறான செயல்களிலிருந்தும் தவிர்ந்துகொள்வது எமது கடமையாகும்.

அனைவருக்கும் பொதுவான இந்தச் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு நாமும் பங்களிப்புச் செய்வோம்.

## பயிற்சி

**சுருக்கமான விடை தருக.**

1. சுற்றாடலைப் பாதுகாத்தல் என்றால் என்ன?
2. நீர் நிலைகளை எவ்வாறு சுத்தமாக வைத்திருக்கலாம் என்பது பற்றிக் கூறுக.
3. எமது வளிமண்டலத்தை மாசுபடுத்தும் செயல்கள் மூன்றைத் தருக.
4. மலசலம் கழித்து அசுத்தப்படுத்த வேண்டாமென ஹதீஸில் கூறப்பட்ட இடங்கள் இரண்டைத் தருக.

# 17 நஜீஸை நீக்குவோம்

இஸ்லாம் சுத்தத்தை வலியுறுத்துகின்றது. வாழ்வின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சுத்தத்தைக் கடைப்பிடிக்க வழி காட்டுகின்றது. சுத்தமாக இருப்போரை அல்லாஹ்வும் நேசிக்கிறான். மலக்குகளும் மனிதர்களும் நேசிக்கின்றனர். அசுத்தமாக இருப்பதை எவருமே விரும்புவதில்லை.

நஜீஸ் என்ற அரபுச் சொல் எல்லா வகையான அசுத்தங்களையும் குறிக்கப் பயன்படுத்தப் படுகின்றது. இவ்வகையில் நஜீஸ் என்றால் என்ன? அவற்றின் வகைகள் யாவை? அவற்றிலிருந்து சுத்தம் பெறுவது எவ்வாறு? என்பவற்றை இஸ்லாம் விளக்கிக் கூறியுள்ளது.

இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் நஜீஸை அதன் தன்மைக்கேற்ப மூன்றாக வகைப்படுத்தி விளக்கியுள்ளனர். அவையாவன,

1. இலகுவான நஜீஸ்
2. சாதாரண நஜீஸ்
3. கடுமையான நஜீஸ்

### 1. இலகுவான நஜீஸ்

தாய்ப் பாலை மாத்திரம் உணவாக உட்கொள்ளும் இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தையின் சிறுநீர் இதில் அடங்குகிறது. இது படிந்த இடத்தில் சுத்தமான நீரைத் தெளித்துவிட்டால் அவ்விடம் சுத்தமாகிவிடும்.

### 2. சாதாரண நஜீஸ்

மனிதன் மற்றும் ஏனைய பிராணிகளின் மலம், சலம், இரத்தம் போன்றனவும் இவை போன்ற இன்னும் சிலதும் இதில்

அடங்கும். இவ்வாறான நஜீஸ் படிந்தால் முதலில் அதனை அகற்ற வேண்டும். பின்னர் அதன் நிறம், மணம், சுவை போன்றன நீங்கும் வரை சுத்தமான நீரால் கழுவ வேண்டும். தேவையாயின் சவர்க்காரத்தையும் பயன் படுத்தலாம்.

### 3. கடுமையான நஜீஸ்

நாய், பன்றி, அவற்றிலிருந்து பிரிந்த பகுதிகள் மற்றும் அவற்றின் எச்சில், மலம், சலம் போன்றன இதில் அடங்கும். இவ்வகை நஜீஸ் மனிதனது உடம்பிலோ உடையிலோ அவன் பயன்படுத்தும் பொருட்களிலோ படிந்தால் அதனை அகற்றுவதற்காக, ஏழு முறை சுத்தமான நீரால் கழுவ வேண்டும். அதில் ஒரு முறை மண் கரைசல் நீரைப் பயன்படுத்த வேண்டும்.

நஜீஸ்களின் வகைகைள் பற்றி அறிந்தகொண்ட நாம் எப்போதும் அவற்றிலிருந்து நீங்கி சுத்தமாக இருப்போம்.

## பயிற்சி

### இணைக்குக.

| அ | ஆ |
|---|---|
| நஜீஸ் என்பதன் கருத்து | நாய், பன்றிகளின் எச்சில் |
| ஆண் குழந்தையின் சிறுநீர் | ஏழு முறை கழுவ வேண்டும் |
| கடுமையான நஜீஸ் | நிறம், மணம் நீங்க வேண்டும் |
| பன்றியின் எச்சில் தோய்ந்த பொருளை | இலகுவான நஜீஸ் |
| அசுத்தம் சுத்தமாகும்போது | அசுத்தம் |

# 18 தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படுவோம்



ஒவ்வொரு நாளும் பள்ளிவாசல்களில் ஐந்து நேரம் ஜமாஅத்தாகத் தொழுகிறோம் அல்லவா? அப்போது நாம் தகுதியான ஒருவரை இமாமாக (தலைவராக)ப் பின்பற்றி தொழுகிறோம். அத்தொழுகையில் இமாமை முழுமையாகப் பின்பற்றுகிறோம். இமாமிற்குத் தவறுகள் ஏதும் ஏற்பட்டால் கட்டுப்பாடு குலையாமல் அவரைத் திருத்திவிடுகிறோம். அல்லாஹ் ஏன் இப்படியான ஒரு கடமையை எமக்கு விதித்தான் என்பதை நாம் சிந்தித்துப் பார்த்தோமா?

நாம் சமூகமாக இணைந்து வாழ்வதையும் தகுதியான ஒருவரைத் தலைவராக நியமித்து அவருக்குக் கட் டுப்படுவதையும் இஸ்லாம் கடமையாக்கியுள்ளது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் ''உங்களில் மூவர் ஒன்றுகூடினால் அதில் ஒருவரைத் தலைவராக நியமித்துக் கொள்ளுங்கள்.''

தலைவர் ஒருவரை நியமித்து அவருக்குக் கட்டுப் படுவதற்கான பயிற்சியாகவும் அல்லாஹ் ஜமாஅத் தொழுகையை எம் மீது விதியாக்கியுள்ளான்.

எமக்குப் பொறுப்பாக நாம் ஒரு தலைவரை நியமித்துக் கொண்டால் அவருக்குக் கட்டுப்படுவது கடமையாகும். அதனை அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

''நீங்கள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள், அவனது தூதருக்குக் கட்டுப்படுங்கள். உங்கள் பொறுப்பாளர்களுக்கும் கட்டுப்படுங்கள்''.

பொறுப்பாளர்கள் என்று அல்குர்ஆன் யாரைக் குறிப்பிடுகின்றது?

நாட்டுக்குத் தலைவரான ஜனாதிபதி, ஊருக்குத் தலைவரான ஊர்த் தலைவர், வீட்டுக்குத் தலைவரான தந்தை அல்லது தாய், பாடசாலைக்குத் தலைவரான அதிபர். வகுப்புக்குத் தலைவரான ஆசிரியர் அல்லது வகுப்புத் தலைவர்.



இவ்வாறு நாம் விளையாட்டின்போது பயணத்தின்போது குழுச் செயற்பாடுகளின்போது என பல சந்தர்ப்பங்களிலும் தலைவர்களை நியமித்துக் கொள்கிறோம்.

இத்தலைவர்களே பொறுப்பாளர்களாவர். இவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான்.

தலைவராக நியமிக்கப்படுகின்ற ஒருவர் இரக்கமானவராகவும் அன்பானவராகவும் ஆலோசனை செய்பவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் தனக்குக் கீழுள்ளவர்களைச் சிறந்த முறையில் வழிநடாத்தக் கூடியவராகவும் இருக்க வேண்டும். அத்துடன் தான் தலைவராக நியமிக்கப்பட்ட விடயத்திற்குப் பொறுப்புக் கூறவும் வேண்டும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிறந்த தலைவருக்குரிய அழகிய முன்மாதிரியைக் காட்டித் தந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றிய ஸஹாபாக்கள் தலைமைத்துவத்துக்கு எப்படிக் கட்டுப்பட வேண்டும் என்பதற்கு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். அவ்வாறே பல சந்தர்ப்பங்களில் அவர்களே சிறந்த தலைவர்களாகவும் இருந்துள்ளார்கள்.

தலைமைத்துவத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் அல்லாஹ் வெற்றியையும் பரக்கத்தையும் வைத்துள்ளான். எனவே நாம் எந்த சந்தர்ப்பத்திலும் தலைமைத்துவத்திற்குக் கட்டுப்பட்டு நடப்போம். அத்துடன் சந்தர்ப்பம் வரும்போது தலைமையேற்று நடக்க தலைமைத்துவப் பண்புகளையும் வளர்த்துக் கொள்வோம்.

## பயிற்சி

### கீறிட்ட இடங்களை நிரப்புக.


1. உங்களில் மூவர் ஒன்றுகூடினால் அதில் ஒருவரை .................. ஆக நியமித்துக் கொள்ளுங்கள்.

2. இஸ்லாம் தலைமைத்துவத்துக்குக் ......................... கடமையாக்கியுள்ளது.

3. பாடசாலையில் அதிபர், ஆசிரியர், .....................க்கு நாம் கட்டுப்படுதல் வேண்டும்.

4. தலைவராக இருப்பவர் தனக்குக் கீழுள்ளவர்களை சிறந்த முறையில் ............................. இருத்தல் வேண்டும்.

# 19 விருந்தினரை உபசரிப்போம்



''யார் அல்லாஹ்வையும் மறுமையையும் விசுவாசிக்கின்றாரோ அவர் தனது விருந்தினரை கண்ணியப்படுத்தி உபசரிக்கட்டும்'' (புஹாரி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த வகையில் விருந்தினரை உபசரிக்குமாறும் அவர்களைக் கண்ணியப் படுத்துமாறும் இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது. அது ஈமானின் பண்புகளில் ஒன்று என வர்ணித்துள்ளது. அத்துடன் அவர்களை உபசரிப்பதற்கான ஒழுங்கு முறைகளையும் காட்டித்தந்துள்ளது.

விருந்தினர்களை ஸலாம் கூறி வரவேற்றல், அவர்களோடு கனிவோடு உரையாடுதல், சுகநலம் விசாரித்தல், கண்ணியமாக நடந்து கொள்ளல், தம்மிடமுள்ள சிறந்தவற்றைக்

கொண்டு இன்முகத்தோடு உபசரித்தல், அவர்கள் பிரிந்து செல்லும் போது அவர்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தித்து வழியனுப்பி வைத்தல் போன்றன இஸ்லாம் போதித்துள்ள நற்பண்புகளாகும். இதனால் அன்பு, புரிந்துணர்வு, ஒற்றுமை போன்ற பண்புகள் அதிகரிக்கின்றன. துஆவும் கிடைக்கின்றது.

ஒருமுறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் ஒரு விருந்தினர் வந்தார். அவர்களை உசரிப்பதற்காகத் தன் மனைவிமார்களின் வீடுகளுக்குச் சென்று ஏதேனும் உணவு உள்ளதா என்று விசாரித்துப் பார்த்தார். அனைவர் வீட்டிலும் நீரைத் தவிர ஒன்றும் இருக்கவில்லை. உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது அன்ஸாரித் தோழர்களை நோக்கி என்னோடு இருக்கும் இந்த விருந்தினரை உங்களில் யார் உபசரிப்பீர்கள் எனக் கேட்டார்.

உடனே முன்வந்த அன்ஸாரித் தோழர்களில் ஒருவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் விருந்தாளியைத் தன்வீட்டுக்கு அழைத்துச் சென்றார். தன் மனைவியை நோக்கி இறைத் தூதுவரின் விருந்தினரைக் கண்ணியப்படுத்துங்கள் என்றார். அதற்கு அப்பெண்மணி குழந்தைகளுக்கான உணவு மாத்திரமே இன்று வீட்டில் இருக்கின்றது. என்றார்.

மீண்டும் கணவர் விருந்தினருக்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று சொன்னதும் தமது குடும்பத்தினரின் உணவுத் தேவையைத் தியாகம் செய்து விருந்தினரைச் சிறப்பாகக் உபசரித்து கண்ணியப்படுத்தினார். இவர்களது இந்தத் தியாக உபசரிப்பைப் பாராட்டி அல்லாஹ் அல்குர்ஆனில் புகழ்ந்துள்ளான்.

நாமும் விருந்தாளிகளை கண்ணியமாக உபசரித்து அல்லாஹ்வின் அருளையும் திருப்தியையும் பெற்றுக் கொள்வோம்.

## பயிற்சி


அ. விருந்தினர்களை வரவேற்கும்போது நாம் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைகள் நான்கைத் தருக.

1. ..............................................................................
2. ..............................................................................
3. ..............................................................................
4. ..............................................................................

ஆ. விருந்தினர்களை உபசரிப்பதால் கிடைக்கும் பயன்கள் மூன்றைக் கூறுக.

1. ..............................................................................
2. ..............................................................................
3. ..............................................................................

# 20 நோயாளர்களைத் தரிசிப்போம்



ஒருநாள் எனது தாயும் தந்தையும் மருத்துவமனைக்குச் செல்லும்போது நானும் அவர்களுடன் சென்றேன். நாங்கள் அங்கிருந்த நோயாளிகளைச் சந்தித்தோம்.

அவர்களின் சுகதுக்கங்களை விசாரித்தோம். அவர்களைப் பார்த்தபோது பரிதாபமாக இருந்தது. ‘ஷபாகல்லாஹ்’ (உங்களுக்கு அல்லாஹ் சுகமளிப்பானாக) என அவர்களுக்கு ஆறுதல் கூறினோம். அவர்களோடு கை கொடுத்து முஸாபஹா செய்து கொண்டோம். அவர்களுக்குப் பழங்களையும், உணவுப் பொருட்களையும் அன்பளிப்புச் செய்தோம். எங்களுக்காகப் பிரார்த்தனை செய்யுமாறு அவர்களிடம் கேட்டுக் கொண்டோம்.

ஏனெனில் நோயாளி கேட்கும் துஆவை அல்லாஹ் ஏற்றுக்கொள்கிறான். இதனால் எமக்குப் பயன் கிட்டுகின்றது. அவர்கள் எங்களுக்கு நன்றி கூறினார்கள். அப்போது எனது தாயார் ஒரு ஹதீஸை நினைவுபடுத்தினார்.

‘‘ஒரு முஸ்லிம் தனது முஸ்லிம் சகோதரனை நோய் விசாரிக்கச் சென்று திரும்பும் வரை சுவனத்தின் கனிகளைப் பறித்துக்கொண்டிருக்கின்றார்’’ (முஸ்லிம்)

எனவே நாம் இந்த நன்மைகளை அடைந்து கொள்வதற்காகவும், நோயாளிகள் மகிழ்வுற்று ஆறுதல் அடைந்துகொள்வதற்காகவும் எமது நண்பர்கள், அயலவர்கள், உறவினர்கள் போன்றோரிடம் நோய் விசாரிக்கச் செல்லும் பழக்கத்தை எம்மில் ஏற்படுத்திக் கொள்வோம்.

## பயிற்சி

**சரி பிழை கூறுக.**

1. நோய் விசாரிக்கும்போது ‘ஷபாகல்லாஹ்’ என நோயாளிகளுக்காகப் பிரார்த்தித்தல் இஸ்லாமிய வழிமுறையாம். ( )

2. நோயாளியைத் தரிசிக்கும்போது அன்பளிப்புக்கள எடுத்துச் செல்வது சிறந்ததாகும். ( )

3. நோயாளியிடம் எமக்காகப் பிரார்த்திக்குமாறு கூறுவது கூடாது. ( )

4. நாம் முஸ்லிமல்லாத நோயாளிகளை நோய் விசாரிக்கக் கூடாது. ( )

# 21 அண்டை அயலார்



எமது வீட்டைச் சுற்றிக் குடியிருப்பவர்கள் அண்டை அயலவர்களாவர். அவர்கள் உறவினர்களாக இருக்கலாம். முஸ்லிம் சகோதரர்களாக இருக்கலாம். முஸ்லிமல்லாதவர்களாகவும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் அவர்களுக்குரிய கடமைகளும் உரிமைகளும் உண்டு. ஆபத்தின் போதும், தேவையின் போதும் அவர்களே முதலில் வருபவர்கண்ணாவர்.

அவர்களுடன் உறவாடுவது, அன்பளிப்புகளைப் பரிமாறிக் கொள்வது, அவர்களின் சுகதுக்கங்களில் பங்குகொள்வது,

மகிழ்ச்சியில் இணைந்துகொள்வது, ஆபத்தில் உதவுவது, நல்லுபதேசம் செய்வது, தவறுகளை நளினமாக எடுத்துக் காட்டுவது, சொல்லாலோ செயலாலோ உபத்திரவம் செய்யாதிருப்பது போன்றன எமது கடமையாகும்.

''யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டிருக்கின்றாரோ அவர் அண்டை வீட்டாரை கண்ணியப்படுத்தவும்'' (புஹாரி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உபதேசித்திருக்கின்றார்கள்.

அடுப்பிலிருந்து வெளியேறும் புகை, வடிகாலில் ஓடும் கழிவு நீர், வெளியே வீசப்படும் குப்பை, வானொலி, தொலைக்காட்சியின் உரத்த சத்தம், சிறு பிள்ளையின் விளையாட்டுக்கள் போன்றன அயலவருக்குத் தொல்லை கொடுக்கலாம். ஆதலால் அவற்றை இயன்றவரை கட்டுப் படுத்திக்கொள்ள வேண்டும். அயலாரின் தொல்லைகளைச் சகித்துக்கொள்வதும், அவர்களின் உறவைத் துண்டிக்காமல் இருப்பதும், அவர்களோடு அன்பாக நடப்பதும் உயர்ந்த பண்புகளாகும். நாம் நன்றாக நடந்தால் அயலவர்களும் நன்றாக நடந்துகொள்வர் என எதிர்பார்க்கலாம்.

எனவே நாம் அண்டை அயலாருடன் சுமுகமான உறவைப் பேணி வருவோம். இஸ்லாமிய வழிமுறையில் வாழ்ந்து அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவோம்.

## பயிற்சி

அண்டை அயலவர்களுடன் நீங்கள் நடந்துகொள்ளும் ஒழுங்குமுறைகள் ஐந்தைக் குறிப்பிடுக.

# 22 பிறருக்கு உதவுவோம்

நாம் எல்லோரும் மனிதர்கள். மனிதர்கள் தனித்து வாழ முடியாது. அவர்கள் ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ள வேண்டும். அவர்கள் ஒருவரோடொருவர் சேர்ந்து வாழ்பவர்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், உறவு முறையை உடலின் உறுப்புகளுக்கும் கட்டிடங்களின் கற்களுக்கும் உதாரணமாகக் கூறியுள்ளார்கள்.

மனித உறவு என்பது கணவன் மனைவி உறவாக, பெற்றோர் பிள்ளை உறவாக ஆரம்பிக்கின்றது. தொடர்து உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் என விரிவடைகின்றது. ஒருவருக்கொருவர் உதவுவதன் மூலம் அவ்வுறவு மேலும் வலுவடைகிறது. இதனால் சகோதரத்துவம் ஏற்படுகின்றது.

''ஓர் அடியான் தனது சகோதரனுக்கு உதவுகின்ற போதெல்லாம் அல்லாஹ் அவ்வடியானுக்கு உதவி செய்து கொண்டிருக்கின்றான்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கின்றாகள். இதுபோன்றே ''இவ்வுலகில் ஒரு முஸ்லிமின் துன்பம் ஒன்றை நீக்குபவனுக்கு மறுமையில் அல்லாஹ் அவனது துன்பமொன்றை நீக்கிடுவான்'' என்றும் கூறியுள்ளார்கள்.

ஸலாத்துக்குப் பதில் கூறுவது, நோயாளிக்கு ஆறுதல் கூறுவது, விருந்துக்கு அழைத்தால் சமுகமளிப்பது,

தும்மியவருக்காகப் பிரார்த்திப்பது, ஜனாஸாவைப் பின்தொடர்வது போன்றன ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு செய்ய வேண்டிய சில கடமைகளாகும். இவை மனிதனைச் சமமாக மதித்து நடக்கத் தூண்டுகின்றன.



எமக்குப் பொருளால் உதவி செய்ய முடியாது போனால், முக மலர்ச்சியுடன் மற்றவர்களைப் பார்ப்பது, அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வது, விழுந்த பொருளை எடுத்துக் கொடுப்பது, தூக்க முடியாத பொருளை தூக்கிக் கொடுப்பது, பிறருக்கு தீங்கு செய்யாமல் இருப்பது போன்றனவும் உதவி செய்யும் சில முறைகளாகும்.

எனவே நாமும் பிறருக்கு உதவிசெய்து வாழ்வோம்.

## பயிற்சி

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுங்கள்.**

1. உறவு முறை கட்டிடத்தின் கற்கள் போன்று பிணைந்து இருக்க வேண்டும். ( )

2. ஒருவருக்கொருவர் உதவுவதன் மூலம் மனித உறவு சிதைவடைகிறது. ( )

3. விழுந்த பொருளை எடுத்துக்கொடுப்பது நன்மையான செயலாகும். ( )

4. அடியானுக்கு உதவி செய்பவனுக்கு அல்லாஹ் உதவி செய்கிறான். ( )

5. பொருளால் உதவ முடியாவிட்டால் செயலால் உதவ முடியும். ( )

# 23 பயணிகள்

அன்பின் மாணவர்களே! இன்று நாம் பிரயாணத்தோடு தொடர்பான இஸ்லாமிய ஒழுங்குகள் பற்றிக் கற்றுக்கொள்வோம்.

நாம் பல்வேறு தேவைகளுக்காகப் பிரயாணங்களை மேற்கொள்கின்றோம். எமது பிரயாணங்கள் எப்போதும் நல்ல நோக்கம் கொண்டவையாக இருத்தல் வேண்டும். மேலும் இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு முரணில்லாத வகையில் அமைதல் வேண்டும். இஸ்லாம் போதிக்கின்ற பிரயாண ஒழுங்குகளைப் பின்பற்றி ஒழுகுகின்ற போது எமக்கு அல்லாஹ்விடமிருந்து நற்கூலியும் கிடைக்கின்றது. எனவே பிரயாண ஒழுங்குகள் பற்றி நாம் அறிந்து கொள்வோம்

நாம் பிரயாணம் ஒன்றை மேற்கொள்வதற்கு முன்னர், இறைவனைத் தொழுது அவனிடத்தில் பிரார்த்தித்து பிரயாணத்தை ஆரம்பிப்பது முஹம்மத ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையாகும்.

நாம் வீட்டிலிருந்து வெளியேறும்போது,

بِسْمِ اللهِ تَوَكَّلْتُ عَلَى اللهِ...

''பிஸ்மில்லாஹி தவக்கல்து அலல்லாஹ்''

என்று பிரார்த்தித்துக்கொண்டு வீட்டார்களிடம் சொல்லி விட்டு வெளியேற வேண்டும்.

வீட்டிலிருந்து பிரயாணியை வழியனுப்புவோர்

فِيْ اَمَانِ اللهِ

''பீ அமானில்லாஹ்''

எனப் பிரார்த்தித்து வழியனுப்ப வேண்டும்.

பிரயாணி பிரயாணத்தை ஆரம்பித்ததும்

سُبْحَانَ الَّذِي سَخَّرَ لَنَا هَذَا وَمَا كُنَّا لَهُ مُقْرِنِينَ وَإِنَّا إِلَى رَبِّنَا لَمُنْقَلِبُونَ

''ஸுப்ஹானல்லடீ ஸஹ்ஹர லனா ஹாதா வமா குன்னா லஹு முக்ரினீன் வஇன்னா இலா ரப்பினா லமுன்கலிபூன்..''

என்ற துஆவை ஓதிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு நாம் பிரார்த்திப்பதனூடாக இறைவனது பாதுகாப்பு நமக்குக் கிடைப்பதோடு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காட்டித் தந்த முன்மாதிரிகளைப் பின்பற்றியதற்கான நன்மைகளும் கிடைக்கின்றன. பிரயாணத்தின் போது சக பயணிகளுடன் உதவி ஒத்தாசையோடு நடந்து கொள்ள வேண்டும். எமது செயற்பாடுகள் அவர்களுக்கு ஒருபோதும் இடைஞ்சலாக அமையக் கூடாது. பிரயாணத்தின் போது அயலில் உள்ள சகபிரயாணி அண்டை வீட்டாருக்குச் சமமானவராவார். அண்டை வீட்டவருக்கு உரிய உரிமைகளைப் பேணுவது போல சக பிரயாணிகளதும் உரிமைகளைப் பேணுவது கடமையாகும்.

பிரயாணத்தின் போது சக பிரயாணிகளுடன் பண்பாக உரையாட வேண்டும். எமது உரையாடல்கள் உயர்ந்த சப்தத்தில் அமையக் கூடாது.

அதன்போது எமது கழிவுப் பொருட்களை பாதையில் வீசுவதை அல்லது வாகனத்தின் ஜன்னலின் ஊடாக வெளியே வீசுவதைத் தவிர்ந்து கொள்ள வேண்டும். அவற்றை உரிய இடத்தில் இடுவதற்குப் பழகிக் கொள்ள வேண்டும். பிரயாணத் தலங்களில் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும். அவ்விடங்களை சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்க உதவுவது எமது கடமையாகும்.

இஸ்லாம் எமக்குக் கற்றுத் தந்துள்ள பிரயாண ஒழுங்குளை முறையாகக் கடைப்பிடிப்பதுடன் அதனுடன் தொடர்பான சந்தர்ப்ப துஆக்களையும் மனனமிட்டு ஓதி வருவோம்.

## பயிற்சி

### இணைக்குக.

| அ | ஆ |
|---|---|
| வீட்டைவிட்டு வெளியேறும்போது | ஸுப்ஹானல்லதீ ஸஹ்ஹரலனா |
| வழியனுப்பும்போது | தொழுது பிரார்த்தித்தல் |
| பிரயாணத்தை ஆரம்பிக்கும்போது | பிஸ்மில்லாஹி தவக்கல்த்து அலல்லாஹ் |
| பிரயாணத்தை மேற்கொள்வதற்கு முன் | பீ அமானில்லாஹ் |

# 24 முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நற்பண்புகள் - I

**நபியே! நிச்சயமாக நீர் மகத்தான நற்குணங்கள் உடையவராகவே இருக்கின்றீர் (அல்குர்ஆன் 68:4)**

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நற்குணங்கள் நிறைந்தவராகக் காணப்பட்டார்கள். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்த அநாதையாக இருந்தாலும் நல்ல பண்புகளுடனேயே வளர்ந்தார்கள்.

அவரது நற்பண்புகளுக்கு அறியாமைச் சமூகம் என்று வழங்கப்பட்ட அன்றைய ஜாஹிலிய்ய சமூகம் கூட சான்று பகரத் தவறவில்லை. அவர் ஒருபோதும் பொய் பேசவில்லை. இதனால் **அஸ்ஸாதிக் (உண்மையாளர்)** என அழைக்கப்பட்டார்கள். எவருக்கும் துரோகம் செய்யவில்லை. வாக்கு மீறவுமில்லை.நம்பிக்கை நாணயமாக நடந்தார்கள். இதனால் **அல் அமீன் (நம்பிக்கைக்குரியவர்)** என அழைக்கப் பட்டார்கள்.

அன்றைய மக்கள் செய்து வந்த எந்தவிதமான பாவ காரியங்களிலும் அவர் ஈடுபடவில்லை. அவற்றிலிருந்து ஒதுங்கியே வாழ்ந்தார்கள். அடுத்தவர்களுக்கு முன்மாதிரியாகவே திகழ்ந்தார்கள். நல்ல நண்பர்களுடன் பழகினார்கள். நன்மையே செய்தார்கள். அதனையே எப்போதும் போதித்தார்கள். மூத்தோரை கண்ணியப்படுத் தினார்கள். இயலாதோருக்கு உதவினார்கள். பிறர் துன்பம்

துடைத்தார்கள். ஏழைகளின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தார்கள். வீணான பொழுதுபோக்குகளைத் தவிர்ந்து கொண்டார்கள். துணிச்சலுடன் வாழ்ந்தார்கள். அம்பெறிதல், குதிரையோட்டப் பயிற்சிகளில் ஈடுபட்டார்கள். உடலைப் பலமாகவும் தூய்மையாகவும் வைத்துக் கொண்டார்கள்.

ஹலாலானவற்றையே உண்டார்கள். தனக்குக் கிடைத்தவற்றையே உட்கொண்டார்கள். உணவை ஒருபோதும் குறை கூறியதேயில்லை. ஆடையிலும் எளிமையைக் கடைப்பிடித்தார்கள். பகட்டைத் தவிர்ந்து கொண்டார்கள்.

தனது தேவைகளைத் தானே செய்துகொண்டார்கள். குடும்பத்தவர்களுடன் அன்போடு நடந்துகொண்டார்கள். வீட்டு வேலைகளில் மனைவிக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள். தொழுகை அழைப்பு வந்ததும் உடன் அதனை நிறைவேற்றினார்கள்.

முன்மாதிரிமிக்க பிள்ளையாக, வாலிபனாக, குடும்பத் தலைவனாக, படைத் தளபதியாக, நாட்டை ஆளும் நேர்மை மிக்க ஆட்சியாளராக வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் முன்மாதிரியாக வாழ்ந்துகாட்டினார்கள். இவற்றை அல்குர்ஆன் சான்று பகர்கிறது.

‘‘நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடத்தில் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கின்றது’’ (33:21)

ஆகவே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்வின் முன்மாதிரிகளை நாமும் கடைப் பிடித்து ஈருலக வாழ்விலும் வெற்றியடைவோமாக.

# 25 முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நற்பண்புகள் - II

## பொறுமை

அன்றொருநாள் அரபு நாட்டில் கிழக்கு வெளுக்கிறது. சூரியன் பொற்கதிர் பரப்பி வானில் மெல்ல எழுகிறது. மக்கள் தம் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காகப் புறப்படுகின்றனர். மேய்ச்சல் தரையை நோக்கி கால்நடை களுடன் பயணிப்போர் ஒரு புறம். வியாபாரத்துக்காகப் பயணிப்போர் மறுபுறம். ஏர், கலப்பைகளுடன் விவசாய நிலங்களை நோக்கிச் செல்வோர் இன்னொரு புறம். இவற்றுக்கு மத்தியில் நாளாந்த தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளச் சந்தைக்குச் செல்கின்றதொரு பெருங்கூட்டம். அந்தக் கூட்டத் தில் ஒரு மூதாட்டி தன்னந்தனியே சந்தையில் பொருட்களை வாங்கி பொதியை நிரப்புகிறாள். சிரமத்தோடு அதனைச் சுமக்கிறாள். பாதையில் சுமையோடு சிரமப்படுகிறாள். அப்போது ஒரு இளம் மனிதர் வருகிறார். பொதியோடு சிரமப்படும் வயோதிபத் தாயை நெருங்குகின்றார்.

‘‘தாயே! இந்தப் பொதியை என்னிடம் தாருங்கள். நான் அதனை உங்கள் வீட்டுக்குக் கொண்டு வந்து தருகிறேன்’’ எனக் கேட்கின்றார்.

அந்த மூதாட்டியும் பெரும் எதிர்பார்ப்போடு அப்பொதியை ஒப்படைத்துவிட்டு நிம்மதிப் பெருமூச்சு விடுகிறாள். பொதியைச் சுமந்த மனிதரோ அமைதியாக முன்னால் செல்கின்றார். பின்தொடர்ந்த மூதாட்டியோ கதையளக்க ஆரம்பிக்கின்றாள்.

‘‘மகனே! எமது மக்கத்துப் புனித நகரில் முஹம்மத் என்றொருவர் வந்திருக்கிறார். அவர் எமது மூதாதையரின் கடவுள்களை இழிவுபடுத்துகிறார். குடும்பங்களைப் பிரிக்கிறார். பாரம்பரியமாக நாம் செய்து வந்தவற்றில் குறை காண்கிறார். அவரை விட்டு வைக்கக் கூடாது. இப்போதே அவரை மட்டந்தட்டி இழிவுபடுத்த வேண்டும். இல்லாதொழித்திட வேண்டும். இன்றேல் நம் சமூகமே அவர் பின்னால் அள்ளுண்டு சென்றுவிடும்’’ என்று பாதை நெடுகிலும் அம்மூதாட்டி அடிக்கடி பேசிக்கொண்டே சென்றாள்.

அத்தனை செய்தியையும் அமைதியாகவும் மிகப் பொறுமையோடும் அம்மனிதர் செவிமடுத்துக்கொண்டே வருகின்றார். மூதாட்டியின் வீடும் நெருங்கிவிட்டது.

‘‘தாயே இதோ வீட்டை அடைந்துவிட்டோம். உங்கள் பொதியை இங்கே வைக்கின்றேன்’’ என்கிறார் அம்மனிதர்.

அந்தத் தாயோ பொதி சுமந்த அந்த மனிதருக்குச் சுமைக் கூலி கொடுப்பதற்காகத் தன் பணப் பையைத் திறக்கிறாள். பணத்தை எடுத்து நீட்டுகிறாள்.

அம்மனிதரோ ‘‘தாயே எனக்குக் கூலி வேண்டாம். உங்களுக்கு உதவ வேண்டும் என்பதற்காக முன் வந்தேன்’’ என்றார்.

அவரது நற்பண்புகளைக் கண்டு மகிழ்ந்த அந்த மூதாட்டி ‘‘மகனே நீங்கள் யார்?’’ என்று கேட்டாள்.

‘‘தாயே இதுவரையிலும் நீங்கள் யாரைப் பற்றி கதையளந்து வந்தீர்களோ அந்த முஹம்மத் நான் தான்’’ என்றார் அம்மனிதர்.

திக்பிரமை அடைந்த அந்த மூதாட்டி ஆச்சரியமுற்று அவரை நோக்கி ‘‘இதோ நான் உங்கள் ரப்பை இறைவனாகவும் உங்களை இறைத் தூதராகவும் ஏற்றுக்கொள்கின்றேன்’’ என்று கலிமா மொழிந்து இஸ்லாத்தை ஏற்கின்றாள்.

பிள்ளைகளே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பொறுமையைக் கடைப்பிடித்ததனால் ஒரு பெண் இஸ்லாத்தை தழுவிக் கொண்டார் அல்லவா?

இந்த வரலாற்றுச் சம்பவமானது பொறுமையின் அவசியத்தையும் அதன் பயனையும் உணர்த்துகிறது. ஒரு முஸ்லிம் பொறுமையைக் கடைப்பிடிக்கும்போது அவனில் துணிவும் உறுதியும் துளிர்விடுகின்றது. சோதனைகள் எதையும் தாங்கும் மன வலிமை கிடைக்கிறது. நன்மையின் வாயில்கள் சகல வழிகளிலும் திறக்கப்படுகின்றன.

ஆதலால் நாமும் வாழ்வின் எல்லா சூழ்நிலையிலும் பொறுமையைக் கடைப்பிடித்து வருவோமாக.

பயிற்சி

## இடைவெளி நிரப்புக.

(அம்பெறிதல், உணவை, நற்குணம், பொறுமையாக, நம்பிக்கையாக, அஸ்ஸாதிக்)

1. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உண்மையை உரைப்பவராக இருந்தமையால் .............................. என அழைக்கப்பட்டார்கள்.

2. நபியே நீர் மகத்தான ...................... உடையவராக இருக்கின்றீர்.

3. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ..................... ஆக நடந்தமையால் அல் அமீன் என அழைக்கப்பட்டார்கள்.

4. மூதாட்டி திட்டும்போது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் .................. இருந்தார்கள்.

5. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருபோதும் ............................. குறை கூறியதில்லை.

6. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ..................... போன்ற பயிற்சிகளில் ஈடுபட்டு உடலைப் பலப்படுத்திக் கொண்டார்கள்.

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுங்கள்.

1. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது வாலிபப் பருவத்தில் பெற்றோரை இழந்தார்கள். ( )

2. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அநாதையாக வளர்ந்தாலும் நல்ல பண்பாளராகவே திகழ்ந்தார்கள். ( )

3. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வீட்டு வேலைகளில் ஒருபோதும் பங்கேற்கவில்லை. ( )

4. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பயன்தரும் பொழுதுபோக்குகளில் நண்பர்களுடன் ஈடுபட்டார்கள். ( )

5. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது வேலைகளைப் பிறர் மூலமே செய்து கொண்டார்கள். ( )

## செயற்பாடு

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது நற்பண்புகளுடன் தொடர்பான மற்றொரு சம்பவத்தைத் தேடி எழுதுங்கள்.

# 26 முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வெட்க உணர்வு

வெட்கம் ஒரு முஸ்லிமின் அடிப்படைப் பண்பு. அது ஈமானின் வெளிப்பாடு. உண்மையான விசுவாசத்தின் அறிகுறி. அதன் அழுத்தமும் வலிமையும் நற்செயலைத் தூண்டுவதுடன் தீய செயல்களிலிருந்தும் எம்மைத் தடுத்துவிடும். செயல்களை அழகுபடுத்தும். முஃமினைப் பலமுள்ளவனாக மாற்றிவிடும். பணிவுள்ளவனாக ஆக்கும். அவனை மனித மாண்பும் நிறைந்த நற்குணமும் உடையவனாக ஆக்கிவிடும்.

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வெட்கத்தைப் போதித்தார்கள். அதனை வலியுறுத்தினார்கள். அதற்கு முழுமையான செயல் வடிவம் கொடுத்து வாழ்ந்து காட்டினார்கள்.

அபூ ஸஈத் அல்குத்ரி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் 'திரை போட்டு தம்மை மறைத்துக்கொண்டு வாழும் கன்னிப் பெண்களை விடவும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதிக வெட்கமுடையவர்களாக காணப்பட்டார்கள். ஏதும் விரும்பத்தகாத பாவச் செயல்களைக் கண்டால் அதனையிட்டு அவரது கோபத்தின் அடையாளத்தை அவரது முகத்தில் காணலாம்' (புஹாரி)

வெட்க உணர்வின் மற்றொரு வெளிப்பாடு தீமைகள், பாவங்கள், அவலட்சணமான செயல்களைச் செய்தல் போன்றவற்றிலிருந்து தவிர்ந்து நடப்பதாகும்.

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வாழ்வில் இடம்பெற்ற ஒரு நிகழ்வை அவதானியுங்கள்.

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜின்போது அல்லாஹ்விடமிருந்து ஐம்பது நேரத் தொழுகையைப் பரிசாகப் பெற்றுத் திரும்புகிறார்கள். வழியில் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சந்திக்கிறார்கள். தனக்குக் கிடைத்த பரிசு பற்றித் தெரிவிக்கிறார்கள். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களோ 'நீங்கள் திரும்பிச் சென்று உங்கள் இறைவனிடத்தில் இதனைக் குறைக்கச் சொல்லுங்கள்'' என்றார். முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கருத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் ஆலோசனை பெறுகின்றார்கள். இறைவனிடம் திரும்பிச் செல்கின்றார்கள்.

தொழுகையின் அளவைக் குறைத்துக் கேட்கின்றார்கள். அது பத்து நேரத் தொழுகையாகக் குறைக்கப்படுகின்றது. அதனைப பெற்றுத் திரும்பும் வழியில் மீண்டும் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சந்திக்கிறார்கள். தொழுகையை இன்னும் குறைத்துக்கொள்ளும்படி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆலோசனை வழங்குகிறார்கள். முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் திரும்பிச் சென்று குறைத்துக் கேட்கின்றார்கள். இறுதியில் ஐந்து நேரமாக குறைத்துக் கொடுக்கப்படுகின்றது. அதனையும் குறைத்துக்கொள்ளுமாறு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் குறிப்பிட்டபோது

நான் எனது இறைவனிடம் திரும்பிச் சென்று இதற்கு மேல் குறைத்துக் கேட்பதற்கு மிகவும் வெட்கப்படுகிறேன் என்றார்கள்.

மற்றொரு நிகழ்வையும் பாருங்கள்.

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸைனப் பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா அவர்களை மணமுடித்தார்கள். தனது உறவினர்களையும் நண்பர்களையும் அழைத்து விருந்தளிக்கிறார்கள். விருந்துண்ட அனைவரும் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றுவிட்டார்கள். மூன்று பேர் மாத்திரம் அங்கே அமர்ந்து கதைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களது கதை நீண்டு கொண்டே சென்றது. பின்னிரவும் ஆகிவிட்டது. அவர்கள் வெளியேறிச் சென்றிட வேண்டுமென நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விரும்பினார்கள். ஆயினும் அதனைச் சொல்வதற்கு அவர்களுக்கு வெட்கமாக இருந்தது. அவர்கள் சங்கடப்பட்டார்கள். இந்த நிலையில் அல்லாஹ் வஹி அருளினான்.

‘(விருந்து தயாரானதன் பின்) நீங்கள் அழைக்கப்பட்டால் (அங்கே) பிரவேசியுங்கள்; அன்றியும் நீங்கள் உணவருந்தி விட்டால் (உடன்) கலைந்து போய் விடுங்கள்; பேச்சுகளில் மனங்கொண்டவர்களாக (அங்கேயே) அமர்ந்து விடாதீர்கள்; நிச்சயமாக இது நபியை நோவினை செய்வதாகும்; இதனை உங்களிடம் கூற அவர் வெட்கப்படுவார்; ஆனால் உண்மையைக் கூற அல்லாஹ் வெட்கப்படுவதில்லை. (33: 53)

எனவே, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வெட்கத்தைப் பற்றி விரிவான பாடங்களைக் கற்றுத் தந்துள்ளார்கள். வெட்க உணர்வு நிறைந்தவர்களாக முஸ்லிம்கள் இருக்க வேண்டும் என வழிகாட்டியும் இருக்கிறார்கள்.

‘‘ஒவ்வொரு மதத்திற்கும் ஒழுக்கம் இருக்கிறது. இஸ்லாத்தின் ஒழுக்கம் வெட்கம் (மானம்)’’ என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போதித்துள்ளார்கள்.

ஆகவே நாமும் வெட்கத்தைக் கடைப்பிடித்து ஒழுக்க சீலர்களாக வாழ்வோம்.

## பயிற்சி

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுங்கள்.

1. வெட்க உணர்வு ஈமானின் வெளிப்பாடாகும். ( )
2. வெட்கம் நற்செயல்களை மாத்திரம் செய்யத் தூண்டும். ( )
3. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மிஃராஜில் கிடைத்த பரிசைக் குறைத்துக் கேட்க அவர் வெட்கப்படவே இல்லை. ( )
4. தன் வீட்டில் விருந்துண்ட பின் பேசிக் கொண்டிருந்தவர்களை வெளியேறுமாறு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். ( )
5. விரும்பப்படாத செயல்கள் எதனையும் கண்டால் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கோபப்படுவார்கள். ( )

# 27 இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி

புஹாரா என்ற ஊர் மத்திய ஆசியாவில் உள்ளது. அங்கு இஸ்மாயீல் என்ற ஒரு பெரியார் வாழ்ந்தார். அவருக்கு ஒரு ஆண் குழந்தை கிடைத்தது. அவர் அக்குழந்தைக்கு முஹம்மத் என்று பெயர் சூட்டினார். புஹாராவில் அவர் பிறந்ததால் அவரை புஹாரி என அழைத்தனர்.



புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் சிறுவராக இருக்கும்போதே தந்தையை இழந்தார். சிறுவயதில் கண் பார்வையையும் இழந்தார். இதனால் விதவையாக இருந்த தாயார் மிகுந்த கவலை அடைந்தார். பிள்ளை இழந்த பார்வையை மீட்டித் தருமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தார். அல்லாஹ் அவர்மீது அருள் புரிந்தான். பார்வையை மீட்டிக்கொடுத்தான். அவர் பத்து வயதுச் சிறுவனாக இருந்தபோது தனது திறமைகளை வெளிப்படுத்தினார்.

தாயார் அவரை ஹஜ்ஜுக்கு அழைத்துச் சென்றார். ஹஜ் முடிந்ததும் அவர் மக்காவில் தங்கினார். அங்குள்ள அறிஞர்களிடம் கல்வி கற்றார். அவருக்கு இஸ்ஹாக் ரஹ்மதுல்லாஹி

அலைஹி, அஹ்மத் ரஹ்மதுல்லாஹி அலைஹி என்ற அறிஞர்கள் கற்பித்தனர்.

அவரிடம் அதிகமாக நினைவாற்றல் இருந்தது. தான் கேட்கின்ற ஹதீஸ்களை அப்படியே நினைவில் வைத்துக் கொள்வார். தொடர்ந்து அறிஞர்களின் நூல்களையும் மனனமிட்டார். பல பிரதேசங்களுக்கும் பயணம் செய்து ஹதீஸ்களைத் திரட்டினார். அவர் பதிவு செய்த ஹதீஸ்கள் எவ்வளவு தூய்மையானவை என்பதைப் பின்வரும் சம்பவத்தின் மூலம் நாம் அறிந்துகொள்ளலாம்.




குறித்த ஹதீஸ் ஒன்று அரிதாக ஒருவரிடம் மட்டும்தான் இருந்தது. அந்த ஹதீஸைப் பெறப் பல நூறு மைல்கள் தூரம் பிரயாணித்து வந்த இமாமவர்கள், அந்த ஊர் மக்களிடம் ஹதீஸை மனனமிட்டு வைத்துள்ள நபர் பற்றி விசாரித்தார்கள். அப்போது அந்த ஊர் மக்கள் அனைவரும் அந்த நபர் நாணயமானவர், உண்மையாளர் என சான்று கூறினார்கள்.

அதன்பிறகு இமாமவர்கள் அந்நபரிடம் சென்றார், அவரைச் சந்திக்கும் போது அவர் ‘‘என்னுடைய வளர்ப்புப் பிராணியை தொழுவத்தில் கட்டிவிட்டு வருகிறேன்’’ என்று

இமாம் அவர்களிடம் கூறிவிட்டு ஒரு கூடையை எடுத்து அதில் புல் இருப்பது போல் காட்டி அந்தப் பிராணியை ஏமாற்றி அதை தொழுவத் தின் பக்கம் அழைத்தார்,

இதைக் கண்ட இமாமவர்கள் ''நீங்கள் மனிதர்களிடம் உண்மையாக இருந்தாலும் விலங்குகளை ஏமாற்றிவிட்டீர்கள். நீங்கள் அறிவிக்கும் ஹதீஸ் எனக்குத் தேவையில்லை. நான் நபிமொழிகளின் உண்மைத் தன்மையில் உறுதியானதை மட்டும் சேகரிக்க விரும்புகிறேன்'' என்று கூறித் தன்னுடைய பல நூறு மைல்கள் தூரப் பயணத்தைக் கூடப் பொருட்படுத்தாமல் அந்த ஹதீஸைப் பெறாமல் திரும்பிச் சென்றார்கள்.

இவ்வாறாகப் பல சிரமங்களுக்கு மத்தியில் ஹதீஸ்களைத் தொகுத்து நூலாக எழுதினார். அதுவே **ஸஹீஹுல் புஹாரி** என அழைக்கப்படும் புஹாரி ஹதீஸ் கிரந்தமாகும்.




ஸஹீஹ் புஹாரி ஹதீஸ் தொகுப்பு

அவர் அதனை மாணவர்களுக்குக் கற்பித்தார். அவர்களும் பிற்காலத்தில் சிறந்த அறிஞர்களாக உருவாகினர்.

இந்நூல் முஸ்லிம் சமூகத்தினால் அல்குர்ஆனுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படுகிறது.

## பயிற்சி

### வெற்றிடங்களை நிரப்புக.

1. புஹாரா என்பது ............................ உள்ள ஓர் ஊராகும்.

2. இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் தந்தையின் பெயர் .............................................. ஆகும்.

3. இமாம் புஹாரியினால் ............................ எனும் நூல் தொகுக்கப்பட்டது.

4. இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் சிறு வயதிலேயே கற்கின்ற விடயங்களை ................ செய்யும் ஆற்றல் உள்ளவராக இருந்தார்கள்.

5. இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களுக்கு பெற்றோர் இட்ட பெயர் ..................................... என்பதாகும்.